REGD. M. 4842

# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 5–12–48 | இதழ் 25

## தத்தளிக்கும் தம்பதிகள்



துணிவுடன் பாய்ந்து தாக்கி, சர்க்கார் படைகளைச் சிதறடித்து, வெற்றிமேல் வெற்றிபெற்று வரும், கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக, இப்போது அளிக்கப்படுவதைவிட அதிகமான அளவிலும் முறையிலும் சியாங் சர்க்காருக்கு, அமெரிக்கா, உதவிசெய்ய வேண்டும் — உடனடியாக, என்ற கருத்தை வலியுறுத்தவும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ட்ருமனிடம் நேரடியாக விஷயத்தை, நிலைமையை விளக்கவும், சியாங்கே ஷேக்கின் மனைவியார், தோழியர் சியாங், அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். துணைவியாரின் தூது மூலம் துரிதமான உதவி கிடைக்கும் என்று நம்பிக்களிக்கிறார் சியாங்— ஆனால் இன்று நிலைமை, இவர்களைத் தத்தளிக்கும் தம்பதிகளாக்கிவிட்டது.



## பொன் விலங்கு

16-ம் பக்கத் தொடர்ச்சி

நிர்வாகத்தலைவராகக் கவர்னரைக் கொண்டுள்ள மாகாணங்கள், கமிஷனரைத் தலைவராகக் கொண்டுள்ள மாகாணங்கள், சுதேச சமஸ்தானங்கள்முதலியனவற்றைக் கொண்டுள்ள ஒரு யூனியன் சர்க்கார் அமைக்கப்பட்டுள்ளது.

கவர்னர் மாகாணங்களுக்கும், சுதேச சமஸ்தானங்களுக்கும் வேற்றுமை காட்டப்பட்டிருக்கிறது. மாகாணங்களைக் காட்டிலும் அதிக சலுகை சமஸ்தானங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்திய யூனியனில் சமஸ்தானங்கள் 'சேர்ந்த பொழுது செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களில் ஏதாவது நிபந்தனைகள் இருந்தால், அதனை மீறியூனியன் சர்க்கார் சமஸ்தான அதிகாரத்தில் தலையிடாது. வரிவிதிப்பது, வரிவசூலிப்பது, தடைவரிவிதிப்பது முதலியவரி இனங்களிலும், யூனியன் சர்க்கார் சமஸ்தானங்களில் தலையிடாது.

கவர்னர் மாகாணங்களில், மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள எந்த விஷயங்களிலும், அமைப்பு முறையைத் திருத்தம் செய்யாமலே, தேசிய நெருக்கடி என்று பெயர் கூறி, எந்த வேளையிலும் யூனியன் சர்க்கார் தலையிட்டுச் சொந்தமாக்கிக்கொள்ளலாம். அதாவதுமாகாண சர்க்கார்களின் உரிமைகளைத் தகர்த்து விடலாம்!

கவர்னர்களுக்கு அவசரச்சட்டங்களைப் பிறப்பிக்க உரிமையுண்டு. பதினைந்து நாளைக்கு, மாகாண அரசியல் அமைப்பு முழுவதையுமோ, அதில் ஒரு பகுதியையோ, சக்தியற்றதாக்க கவர்னருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது மட்டுமா? மாகாண அமைப்பு முறையைக் குலைத்துவிட்டு, அவ்வாறு கலைக்கப்பட்ட மாகாணத்தை யூனியன் சர்க்காரின் அதிகாரத்திற்குள்கொண்டுவர, யூனியன் தலைவருக்குச் சர்வாதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சர்வாதிகாரம் கொண்டுள்ள யூனியன் தலைவர் பொதுமக்கள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்ல. யூனியன் அரசியலில் இரு சட்டசபைகள் உண்டு. இந்த இரு சட்டசபைகளில்உள்ள அங்கத்தினர்களும், மாகாண சட்டசபைகளின் அங்கத்தினர்களும், யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அந்தப் பதவியின் ஆயுட்காலம் ஐந்துஆண்டு. அவருடையமாதச்சம்பளம் ரூ 5500 ஆகும். , அவர், ஏதாவது அவருக்குள்ள அதிகார எல்லையைக் கடந்து விடுவாரானால், அவர்மீது குற்றஞ்சாட்டித்தண்டிக்கும்உரிமை,யூனியன் பார்லிமெண்டுக்கு உண்டு. இந்த யூனியன் தலைவரே, இராணுவத்தின் தலைவராவார். இத்துறையில், இந்த அரசியல் அமைப்பு, 1919-ல் ஜெர்மன் குடியரசுக்கு ஏற்படுத்தப்பட்ட வெய்மீர் அரசியல் அமைப்பு போன்று இருக்கிறது. ஜெர்மனியில் கண்டோம் அதன் நடைமுறையை!

இந்திய யூனியனில் இருசட்டமியற்றும் மன்றங்கள் உண்டு, ஒன்று பொதுமக்கள் சபை, மற்றொன்று மேல்சபை. இந்த இரு சபைகளுக்குஞ்சேர்ந்து பார்லிமெண்ட் என்று பெயர்.

யூனியன் மேல்சபை 250 அங்கத்தினர்களைக்கொண்டதாக இருக்கும். இவர்களில் 15 நபர்கள், யூனியன் தலைவரால் நியமனம் செய்யப்பட்டவர்கள். மற்றப் பிரதிநிதிகளும் பொதுமக்களால்தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அன்று. மாகாண சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள்-இந்தச்சபை என்றும் சிரஞ்சீவி சபை, என்றைக்கும் கலைக்கப்படமாட்டாது. ஆனால், மூன்றில் ஒரு பகுதி அங்கத்தினர்களின் பதவி, இரண்டாண்டிற்கொருமுறை காலாவதி ஆகிவிடும்

பொதுமக்கள் சபையில் 500 அங்கத்தினர்களுக்குக்குறையாமல் இருப்பார்கள். ஏழரை இலட்சத்திற்கு அதிகமாகாமலும், ஐந்து இலட்சத்திற்குக் குறையாமலும் ஒரு பிரதிநிதிவீதம், அதன் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த சபையின் ஆயுட்காலம் ஐந்துஆண்டு. பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்படும் ஒருமசோதாவை, ஏற்றுக்கொள்ளவும் தள்ளிவிடவும், யூனியன் தலைவருக்கு அதிகாரம் இருப்பதோடு, திரும்பவும் பொதுமக்கள் சபைக்கே அனுப்பவும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பிரதம மந்திரி ஒருவரை நியமிக்கவும், அவரைக் கலந்துகொண்டு மற்றுஞ்சிலரை மந்திரிகளாக நியமிக்கவும், யூனியன் தலைவருக்கு அதிகாரம்அளிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் சபைக்கு இவர்கள் பொறுப்புள்ளவர்களாவார்கள். தலைவரின் நம்பிக்கைக்கு இருப்பிடமாக இவர்கள் உள்ளவரையில் மந்திரிகளாக இருக்கமுடியும்.

மாகாணத்தின் கவர்னர், வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதா அல்லது ஒவ்வொரு மாகாணமும் இரு சட்டசபைகளைக் கொண்டதாக இருந்தால் இருசட்டசபை அங்கத்தினர்களும், ஒருசட்டசபையைக்கொண்டிருந்தால், அதன் அங்கத்தினர்கள்மட்டும் நான்கு நபர்களைத் தேர்ந்தெடுத்து அதில் ஒருவரை நியமிக்குமாறு யூனியன் தலைவருக்கு அனுமதி அளிப்பதா என்று நிலையற்றதன்மையில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், பின்னைய முறைக்குத்தான் அதிகஆதரவு கிடைக்குமென்பதில் ஐயமில்லை. இவ்வாறு தலைவரால், நியமிக்கப்பெறும் கவர்னர், அதே மாகாண வாசியாக இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது.

கவர்னருடைய ஆயுட்காலம்ஐந்து ஆண்டு. அவருக்குச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 4500 இவர் பதவி காலம் வரையில் எல்லாச் செலவுகளும் பொதுக்கணக்கில்தான் எழுதப்படும். யூனியன் தலைவருக்குச் செலவிடப்படுவதும் இதே முறையில்தான்!

கவர்னர்வரம்புமீறிநடந்துகொண்டால், அவரைப் பதவியிலிருந்து விலக்கிவிடுவதற்கு மாகாண சட்டசபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இரு சட்டசபைகள் உள்ள மாகாணங்களுக்கு, கீழ்சபைக்கு இலட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம், வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எந்த மாகாணத்திலும் இந்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 300க்குக் கூடுதலாகாமலும் 60க்குக் குறையாமலும் இருக்கவேண்டும்.

மேல்சபையின் அங்கத்தினர் எண்ணிக்கை, கீழ்சபையின் அங்கத்தினர் எண்ணிக்கையில் நூற்றுக்கு இருபத்தைந்துக்குக் கூடுதலாக இருத்தல் கூடாது. இவர்களில் சிலர், கீழ்சபை அங்கத்தினர்களாலும், குறிப்பிட்டஸ்தாபனங்களாலும், கவர்னரின் நியமனமூலமும் அங்கத்தினர்களாக ஆக்கப்படுபவர்கள். இந்தச்

(7-ம் பக்கம் பார்க்க)

# ★ நம்பிக்கை இல்லை! ★

அந்தக் காரியம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது! மக்கள் ஓர் நல் வழியைக் கண்டறிந்தனர்—அவ்வழி சென்று, தமது விழிப்புணர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும், விளக்கமாக்குகிறார்கள். ஓட்டு வேட்டையில் வெற்றிபெற்றுவிட்ட நம்மை, அடுத்த தேர்தல் வரையில், யார் என்ன செய்பமுடியும், என்று எண்ணும் அகம்பாவப் போக்கை, அடித்து நொருக்குகிறார்கள், ஆண்மையாளர்கள். அருப்புக்கோட்டையில் ஆரம்பமான இந்த அறப்போர், வேறு பல இடங்களுக்கும் பரவுகிறது.

நம்மசர்க்கார்—நம்மமந்திரிகள்—நம்ம M. L. A.க்கள்!—இந்த சொற்சித்திரத்தின் சாயம் மங்கிவிட்டது.

நமது ஓட்டுகளைப் பெற்றுக் கொண்டுசென்றவர்—நம்மால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டவர்—நமக்காகப் பணியாற்றவேண்டியவர், கடமைப்பட்டவர்—நம்மிடம், கெஞ்சிக் கூத்தாடி, ஓட்டுகள் பெற்றுச் சென்றவர்—நமக்கு உண்மை ஊழியராக இருப்பதாக வாக்களித்தவர்—என்று மக்கள் பேசத்தொடங்கிவிட்டனர். ஓட்டுப்பெற்றுச் சென்ற ஒய்யார புருஷர்களை அவர்களின் எஜமானர்கள், இப்போது கணக்குக் கேட்கிறார்கள். ஐயாகாமராஜரே! நீர் தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கே தலைவராக இருக்கலாம்—தீரராக இருக்கலாம்—திராவிடர்கழகத்தைத் தீயிலிட்டே தீருவேன் என்று வீரமாகப் பேசுபவராக இருக்கலாம்—எமக்கு நீர் செய்தது என்ன?—எங்களிடம் ஓட்டுப் பெற்றுச் சென்றவர்தானே நீர்—அக்கரை காட்டினீரா?-என்று கேட்கத் தொடங்கிவிட்டனர். M.L.A.க்களாக உயர்த்தப்பட்டுவிட்ட, பலர்மீது, பொதுமக்கள்—அதிலும் குறிப்பாகக் காங்கிரஸ் ஊழியர்கள், நம்பிக்கை இல்லை என்று கூறவும், கண்டிக்கவும், அறிக்கைகள் வெளியிடவும், துணிந்து முன் வந்துள்ளனர்.

அவர்கள், பல நாட்கள் பொறுத்துப் பார்த்தனர்—சகித்துப் பார்த்தனர்—குறைபோய்விடும், குறைமதி நீங்கும்—என்று எதிர்பார்த்தனர்—நம்பினர்—நல்லவர், ஆனால் ஏதோ அவருக்கு வேறு வேலைத் தொல்லை போலும்—இனிக் கவனிப்பார், என்று பல்லைக் கடித்துக்கொண்டு இருந்து பார்த்தனர்—வெளியே சொன்னால் வெட்கக்கேடாயிற்றே, எதிர்க்கட்சிக்காரன் ஏளனமாகப் பேசுவானே என்னசெய்வது, என்று இருந்து பார்த்தனர்—முடியவில்லை—நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்துக் கொண்டால்—என்று சோக சிந்து பாடாதிருக்க முடியவில்லை அவர்களால்!

கடைசியில், நல்வழி ஒன்றைக் கண்டறிந்தனர்—நம்பிக்கை இல்லை என்று அறிவிக்கின்றனர்—காரணம் காட்டி.

ஓட்டு அளித்தவர்களைக் கவனிப்பதில்லை, குறைகளை நீக்க முயற்சிப்பதில்லை-M.L.A. பதவியைக் கொண்டு சுயநலத்தைத் தேடுகிறார்கள், பொதுநலனில் அக்கரை இல்லை—இவைகளே காரணங்கள்.

நம்பிக்கை இல்லை என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படும், பொதுக் கூட்டத்தின், அமைப்பாளர், பேச்சாளர், காங்கிரஸ்காரர்களே-எதிர்க் கட்சியினர் அல்ல.

தூத்துக்குடி டிவிஷன் பொதுத் தொகுதியின் சட்டசபை அங்கத்தினர், தோழர் கோசல்ராம் மீது, நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை, தென்திருப்பேரை எனும் கிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், நவம்பர் 22ந்தேதி நிறைவேற்றி இருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர், நீண்டகாலமாகக் காங்கிரஸ்காரராக இருப்பவர்.

“தென்திருப்பேரை கிராமத்தில் பிள்ளையார் கோயில் முன்பு, நீண்டகால காங்கிரஸ்வாதி, ஸ்ரீ. அ. வே. ராமகிருஷ்ணன் தலைமையில் 22-ந் தேதியன்று ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தூத்துக்குடி டிவிஷன் பொதுத் தொகுதியின் சட்டசபை அங்கத்தினர், ஸ்ரீ. கே. டி. கோசல்ராம் அத்தொகுதியில் ஜனங்களின் குறைகளை நேரில் கேட்டுப் பரிகாரம் தேட முயற்சிக்காததாலும், 2500 ஏக்கர் நன்செய்நிலங்களுக்கு பாசன வசதி அளித்துவரும் கடம்பாக்குளம் தண்ணீரை, சைபன் மடை மூலம் கீழ்க்குளங்களுக்குக் கொண்டுபோக நடவடிக்கைகள் எடுக்கும் காரணத்தாலும் அவர் MLA பதவியைத் துஷ்பிரயோகம் செய்துகொண்டிருப்பதாலும், அவர் மீது நம்பிக்கை இல்லை என்றும், அவர் M. L. A. பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றினர்.”

இது, தினசரி இதழில் காணப்படும், செய்தி!!

பதவியைத் துஷ்பிரயோகம் செய்கிறார்—தொகுதி மக்களிடம் அக்கரை காட்டாதிருக்கிறார்—எவ்வளவு பலமான குற்றச்சாட்டுகள்!

பதவியைத்துஷ்பிரயோகம் செய்கிறார்—என்ற அந்த வாசகத்துக்கு, என்னென்ன பொருள் கூறினரோ, பொதுக்கூட்டத்தில்! யாரார், எவ்வளவு, உதாரணம் காட்டினரோ, யாருக்குத் தெரியும்!

எவ்வளவு கேலியோ, கண்டனமோ, கோபப் பேச்சோ,!!

ஆசாமி அன்று வந்தாரே, கும்பிடு போட்டபடி!—என்று ஒருவர் கூறியிருப்பார்.

ஆளை மயக்குகிற வித்தையப்பா அது!—என்று இன்னொருவர் விளக்கியிருப்பார்.

எல்லாம் நம்மாலே வந்தது என்று சோகித்திருப்பார், இன்னொருவர்.

பதவி கிடைத்த உடனே, பழைய நிலையையே மறந்துவிட்டாரே, ஆசாமி—என்று கோபித்திருப்பார் ஒருவர்.

பதவியாம், பதவி! சதம் என்று எண்ணிவிட்டார்பதவியை. எத்தனை நாளைக்கு இது!—என்று கொதித்துக் கூறியிருப்பார் வேறொருவர்.

எல்லாம் அவனவன் குடும்பத்துக்குத்தானப்பா உழைக்கிறான்—என்று விசார விருத்தம் பாடியிருப்பார் மற்றொருவர்.

ஓட்டுவேட்டையின்போது, தேன் ஒழுக ஒழுகப் பேசுவது — நான்

ஜரிகைக் குல்லாயல்ல—ஜெமீன்தாரனல்ல—பண மூட்டை அல்ல-ஏழை-உழைப்பாளி—உண்மைத் தொண்டன்-என்று பசப்புவது, பதவி கிடைத்தானதும், அதை எல்லாம் மறந்துவிடுவது இதுவா, நாணயமான போக்கு—நல்லவர் இலட்சணம் இதுவா?—என்று ஆத்திரப் பட்டிருப்பார் இன்னொருவர்.

கேட்க வேண்டுமய்யா இப்படிப் பட்டவர்களை, என்னய்யா செய்தீர் எமக்காக! ஒழுங்காகச் சென்னை போவதும், சம்பளத்தைப் பெறுவதும், சொந்த லாபத்தைத் தேடுவதுமாக இருக்கிறீரே, தவிர, மக்கள் விஷயமாக, என்ன செய்தீர், விரலை மடக்குமே, பார்ப்போம், என்று, கேட்கவேண்டும் — என்று ஒருவர் யோசனை கூறியிருப்பார்.

கேட்டால் என்ன, தலையா போய் விடும், என்று கூறி அந்த ஆர்வத்தைக்கிளறி இருப்பார், வேறொருவர்.

இப்படிப் பல நாட்கள் பேசிப் பேசி, கடைசியில் மன்றமே கூட்டி விட்டனர், நம்பிக்கை இல்லை, என்று தீர்மானம் நிறைவேற்ற!

எவ்வளவு நம்பிக்கையுடன், கோசல ராமர்களைத் தேர்ந்தெடுத்தனர்—எவ்வளவு வெளிப்படையாக இன்று கூறவேண்டி நேரிட்டுவிட்டது, இவர்களின் போக்கு, பொது மக்களுக்குக் கேடு செய்யும் விதமாக இருக்கிறது என்று. காவி கண்டு காலடி வீழ்ந்த முறைபோலவே, கதரைக் கண்டு ஆதரவு தந்த முறையும், இன்று நயவஞ்சகருக்கு இடமளிக்கும் விதமாகி விட்டது, என்பதைக் கண்டறிந்த பொதுமக்கள், வேதனை அடைந்து, நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றுகின்றனர்.

“தற்போதுள்ள சென்னை சட்டசபை அங்கத்தினரின் பெயர் சீரழிவதுபோல், முன்னே எந்தக் காலத்திலும் நடந்ததில்லை” என்று கல்கி எழுதவேண்டிய அளவு, நிலைமை நாற்றமெடுத்திருக்கிறது.

எவ்வளவு தூரம் யோசித்துப் பார்த்துப் பார்த்து, எழுதுவதா வேண்டாமா, என்று சிந்தித்துப் பார்த்துப் பார்த்து, எழுதினால், எதிர்க்கட்சிக்கு இடம் கொடுத்ததாகிவிடுமே, என்றுபயந்து, எழுதாவிட்டால், நம்மை ஏமாளிப் பட்டியலில் அல்லவா, அறிவாளிகள் சேர்த்துவிடுவார்கள் என்று பயந்து, எழுதியே விடுவது என்று துணிவைத் துணைக்கு இழுத்து, எழுதத் தான்வேண்டும்; ஆனால், ‘பூடகமாக’—இலைமறை காயாக — நாசுக்காக, எழுதினால் போதும் என்று எண்ணி, இப்படி எழுதுவோமா, இவ்விதம் எழுதலாமா, என்று பல தடவை சிந்தித்து, மாற்றி மாற்றி எழுதி, எழுதியதைத் திருத்தி, படித்துப் பார்த்துப் பார்த்து, வேகத்தைக் குறைத்து, ஒரு கஷ்டமான மனப் போராட்டத்துக்குப் பிறகு அல்லவா, கல்கி, எழுதியிருக்கும்.

“எந்தத் துறையிலே பார்த்தாலும் ஒழுக்கமின்மை முன்னால் வந்து நிற்கிறது.

அங்கே லஞ்சம், இங்கே லஞ்சம், எங்கே பார்த்தாலும் லஞ்சம் என்ற ரீதியில் பொதுமக்கள் பேசுகிறார்கள்.

“டிராமிலும், பஸ்ஸிலும், ரயிலிலும், திருவிழாவிலும், பொதுக் கூட்டத்திலும், பத்துப்பேர் கூடும் இடங்களிலெல்லாம், அவன் லஞ்சம் வாங்குகிறான், இவன் லஞ்சம் வாங்குகிறான், அங்கே ஊழல் நிறைந்திருக்கிறது, இங்கே சலுகை தாண்டவமாடுகிறது, என்கிற பேச்சுக்களைக் கேட்கிறோம்.” என்று!

மனக்கண் முன்பு, கல்கி ஆசிரியரைக் கொண்டுவந்து பார்த்தால் தெரியுமே, அவர் படும் பாடு!!

எழுதுவதும் கிழித்தெறிவதும், எழுதுவதும் அதிலே நாலுவரிகளை அடிப்பதும், வார்த்தைகளை மாற்றுவதும், கண்ணை மூடிக்கொண்டு யோசிப்பதும், மீண்டும் எழுதுவதும், பெருமூச்செறிவதும் — ஆக இப்படிப்பட்ட நிலையில் அல்லவா, அவர் இருந்திருக்கவேண்டும்.

‘கல்கி’ கலக்கமடைய வேண்டிய அளவுக்கு, நிலைமை கெட்டுக் கிடக்கிறது—ஓரளவுக்காவது நாமும் இது பற்றி எழுதாவிட்டால், நமது அரசியல் ஒழுக்கத்தைப் பற்றியும் பொதுமக்கள் சந்தேகிப்பார்களே, என்று அச்சம் ஏற்பட்டுவிட்டது.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள், எங்களை என்ன செய்துவிட முடியும்!—என்றுதான், அலட்சியமாகப் பேசுவர், M. L. A., க்கள். அரசியல் சட்ட திட்டத்தின்படி, பொதுக்கூட்டத்திலே, நிறைவேற்றப்படும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு, அந்த M. L. A., க்களை, விலக்கிவிட வேண்டும், என்று விதி இல்லை. ஆகவே அவர்களுடைய பதவி பறிபோகாது—ஆனால் சமூகத்தில் அவர்களுக்குக்குள்ள நிலை, நிச்சயமாகப் பாதிக்கப்பட்டுத்தான் தீரும். பதவியை விட்டுவிட மாட்டார்கள்—ஆனால் பயம் அவர்களைப் பிடித்தாட்டத் தொடங்கும்.

துவக்கத்திலே துடுக்குத்தனமாகக் கூடப் பேசுவர், ஆயிரம் தீர்மானம் நிறைவேற்றட்டும் எனக்கென்ன என்று பேசுவர் — கத்தும் போர்வழிகள், கையாலாகாத போர்வழிகள் என்று கண்டிக்கவும் செய்வர், ஆனால், இத்தகு தீர்மானங்கள் நிறைவேற்றும் முறை வளர வளர, இந்த M. L. A. க்களின் உள்ளத்திலே அவர்களையும் அறியாமல் ஓர் அச்சம் புகுந்து குடையும்.

யார் நம்மைக் கேட்க முடியும்!—என்ற போக்கு உடைபடும். இது, மக்களாட்சி முறைக்கு, மிகமிகத் தேவையான, களைஎடுப்புமுறை.

நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம், நிறைவேற்றும் முறை, மேலும் தெளிவானால், வளர்ந்தால், ‘கல்கி’ போன்ற இதழ்கள், இன்னமும் வெளிப்படையாக, விஷயங்களை எழுதித்தீர வேண்டிநேரிடும்.

இப்போது M. L. A.-க்களுக்கு உள்ள ஒரே தைரியம், நாம் எவ்வளவு தவறுகள் செய்தாலும், ஊழல்கள் நடைபெற உடந்தையாக இருந்தாலும், இவைகளை வெளியே நமது கட்சிக்காரர்கள் எடுத்துப் பேச மாட்டார்கள், ஏனெனில், நமது ஊழல்களைப் பேசினால், கட்சியின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிடும் என்றபயம், கட்சிக்காரருக்கு ஏற்படும்—அதனால் அவர்கள் நம்மைக் கண்டிக்க முன்வர மாட்டார்கள்.—என்ற எண்ணந்தான்.

இந்தத் தைரியத்தினால்தான், தான்தோன்றித்தனமாக நடக்கவும், தப்புத்தண்டாக்களையும் அச்சங்கூச்சமின்றிச் செய்யவும், சுயநலவேட்டையாடவும், துணிவு ஏற்படுகிறது.

இப்போது சில தொகுதிகளிலே, நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதுபோல, மேலும் மேலும் நடைபெற ஆரம்பித்தால், M. L. A-க்கள், மக்களாட்சியின்

(13-ம் பக்கம் பார்க்க)

# பர்னட்ஷா, வேண்டுமாம்!

ஏழுகரம்! எவனடா, எண்ணிப் பார்த்தவன்? பைத்யக்காரர்களே! எட்டுக்கால்களா, பெருந்தேவனுக்கு? உங்களுக்கு மட்டுந்தான், தெரிகின்றனவோ, அந்தக்கால்களும், கரங்களும்! நான், என்ன பெட்டைக்கண்ணனோ? பான்—கு தேவனை, நீ பார்த்ததுண்டா? பார்த்தவன் போலவே பேசுகிறாயே! உலகைப் படைத்த ஒருஉத்தமன் உண்டு என்று நம்பு-இன்னமும் சற்றுப் புத்திதெளிவு வேண்டுமானால், உலகம் அமைவதற்கு ஏதோ ஒரு 'சக்தி' இருந்திருக்க வேண்டும், அந்தச் சக்தியின் தன்மையை நம்மால் கண்டுகொள்ள முடியவில்லை, என்று கூறு — வியந்து பேசு — மரியாதை செலுத்து இவ்வளவுதானே, நீ செய்யலாம்! அதை விட்டு விட்டு, பான் - கு தேவன்தான் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தான், அந்தத் தேவனுக்கு, கரம் ஏழு, கால் எட்டு, என்று யாராரோ கட்டிவிட்ட கதைகளைக் கேட்டு, கண்ணை மூடிக்கொண்டு, நம்புகிறாயே! பூமியைத் தொழுகிறாய்? ஏன், என்று கேட்டால், பூமி ஒரு தேவன், என்று கூறுகிறாய். உனக்கு, எல்லாம், தேவன்! சூரியன், சந்திரன், சகலமும்! மந்த மதியினனே! இப்படி மனதைக் குழப்பிக்கொள்ளாதே! பூமி, சூரியன், இவைகளை எல்லாம் தொழ வேண்டியதில்லை. இவைகள், தேவதைகளல்ல! சுவர்க்கத்தைப் பற்றியும் சதா எண்ணிக்கொண்டு, வெறும் கற்பனைச் சுவைக்கு இரையாகிக், காலத்தை வீணாக்காதே!

* * *

இவ்விதம், பேசினார் ஓர் சீனநாட்டுப் பேரறிஞர், லா ஓட்ஸி என்பார். பன்னெடுங்காலமாக, பான் - கு தேவனை நம்பிவந்த, பாமரச் சீனர்கள், பதை பதைத்தனர்! சீறினர்! சிறு மதியாளன்! செருக்குமிக்கோன்! தேவநிந்தகன்! வேதவிரோதி! என்றெல்லாம், லா ஓட்ஸி என்பவரைத் தூற்றினர். அந்தத் தூயவர், அவர்தம் தூற்றுதலைத் துச்சமென்று மட்டுமல்ல, பித்தரின் பிதற்றல் என்று எண்ணினார், தமது பெருநெறியைப் பற்றிப் பேசலுற்றார், பிறகு, பாமரர், அவர் வழி வந்தனர்.

அவர் 'வகுத்தவழி' சீனருக்குக் கடைசிவழியுமல்ல! அவருக்குப் பிறகும், வேறுபல, பேரறிஞர்கள், தோன்றியவண்ணம் இருந்தனர், மதத்தின்மாசு துடைக்க, மறுமலர்ச்சி உண்டாக்க, ஆனால் ஒவ்வொரு மறுமலர்ச்சியின்போதும், பாமரர் மருளத்தான் செய்தனர்—எதிர்த்தனர்—ஏளனம் செய்தனர்—சீறினர்—சபித்தனர் — ஆனால், மறுமலர்ச்சியைத் தடுக்கமுடியவில்லை. பான் - கு தேவனைத்தான் மறுக்கிறாய். சரி, உலகம், எப்படித்தான், உண்டாயிற்று? மூலகாரணம் ஒன்று இருக்க வேண்டுமே? என்ன அந்த மூலகாரணம்? மூலபுருஷர் ஒருவர் இருந்திருப்பாரே? அவர்பற்றி, உமது கருத்து என்ன? — என்று சீற்றம் சிதைந்து, திகைப்புத் தோன்றிய நிலையிலே, சீனப்பாமரர், கேட்கலாயினர். அப்போது, லா ஓட்ஸி, பூமி அமைவதற்கு முன்பு, ஏதோ ஒன்று உருவற்றதாக, மிக இரகசியமானதாக, குறையாத வலிமையுள்ளதாக வேறு ஒன்று இருந்திருக்கவேண்டும்; அதனை உலகின் தாய் என்று கூறலாம். அதை என்ன பெயரிட்டு அழைப்பதென்று தெரியாமல், நான் அதனை, டா ஓ என்று அழைக்கிறேன்—என்று கூறினார்

டா ஓ என்றால், பெரிய இயக்கம் என்பது பொருள்.

லா ஓட்ஸி, கற்பனைக்கடவுளான பான்-கோவை, ஏற்க மறுத்தார் — ஆனால் அதேபோது, அவர் காலத்திலே, விஞ்ஞானம், கருவிலிருந்த காரணத்தால், உலகம் அமைவதற்குள்ள, விளக்கத்தைக் கூறமுடியவில்லை. ஏதோமாபெரும்சக்தி ஒன்று வேலைசெய்திருக்கிறது, அதன்விளைவுதான் இந்தப்பூமி, என்றுமட்டும் உணர்ந்து உரைத்தார். தாம் 'யூகித்ததை' அவர் கற்பனைக்கதைகளுடன் இணைத்துவிடவில்லை—அவருக்கு முன்பிருந்து மக்கள் கொண்டிருந்த கற்பனைக் கடவுட் கொள்கையைக் கைவிடுமாறு கூறினார் — வெற்றியும் பெற்றார்.

ஆனால், அவர் காட்டிய அளவு வெளிச்சம் போதுமென்று மற்றவர்கள் இருந்துவிடவில்லை. அதே சீனநாட்டிலே, தோன்றிய மற்றோர் பேரறிஞரான கன்பூஷியஸ் மனித வாழ்க்கையைப்பற்றி, மேலும்தெளிவுரைகள் தேடிக் கண்டறிந்து கூறலானார். விண்ணகம், மண்ணகம், விண்ணொளி, விண்மீன், போன்றவைகளைப்பற்றிய கற்பனைக்கதைகளை கன்பூஷியஸ் ஏற்றுக் கொள்ளவுமில்லை, சீனமக்களுக்கு அவைகளாம் சிறுநெறி என்று கூறத்தயங்கவுமில்லை. தேவதைகளைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதைவிட, மனிதனைப்பற்றி எண்ணி மனிதனுக்கான காரியத்தைச்செய்ய வேண்டும் என்றார். அவருடைய ஆய்வுரையும், அந்தநாள் ஆஸ்திகர்களுக்கு, நாஸ்திகமாகத்தான்தோன்றிற்று. இன்று, கன்பூஷியஸ்,மகான்கள் மன்றத்தில் வைக்கப்படுகிறார்—ஆனால் அவர் ஆய்வுரைகூறியபோது அவரும் ஒரு மாபாவியாகவே,பாமரரால் கருதப்பட்டார் — மருட்சியடைந்த மக்களால். "தெய்வங்களுக்கு எப்படித் தொண்டு செய்வது?" என்று சீ லூ என்ற சீடர், கேட்டபோது, கன்பூஷியஸ், மனிதனுக்குத் தொண்டு செய்யவே உனக்கு இன்னமும் தெரியாதே! நீ தெய்வங்களுக்குத்தொண்டு எப்படிச் செய்வது என்று கேட்கிறாயே!! மனிதனுக்குச் சேவை செய், முதலில்!" என்று கூறினாராம்.

இந்த அளவுக்கு மதத்துறையிலே மாசு துடைக்கும் காரியம் செய்வதே, அந்நாளில். மிக மிகக் கஷ்டமான காரியம். அவ்வளவு அதிகமான மூடுபனி, மக்களின் மூளையில்! கற்பனைகளை உண்மைகளென்றுநம்பி வந்தகாலம்.

சீனநாட்டிலேமட்டுமல்ல,உலகில், பல்வேறு நாடுகளிலேயும் விஞ்ஞான விளக்கம் கிடைப்பதற்கு முன்பு, பாமரமக்கள், எந்தக் காட்சிக்கும், நிகழ்ச்சிக்கும், தத்தமது திறனுக்கு ஏற்றமுறையில், பலர், கட்டிவிட்ட கதைகளையே, தத்துவங்களாகக் கொண்டு, அவற்றின்மீது, பலபூஜா முறைகளையும் சடங்குகளையும் அமைத்துக்கொண்டு, அதனையே தமது மதம் என்று நம்பிவந்தனர்.

பேரு, நாட்டிலே, சூரியனுக்கு, சந்திரன்தேவி என்றஒரு கதை! கதை,

என்று இன்று கூறமுடிகிறது. பெரு நாட்டுமக்கள், நெடுங்காலம், இதனைத் தமது மத உண்மை என்று எண்ணி மதித்தனர். இடி, மின்னல், ஆகியவைகளைச் சூரியதூதர்கள் என்று நம்பினர். ஹான்கான் என்றொரு தேவன் — அவன் சாகாவரம் தருபவன்! அபஜிதான் என்றோர்தேவன் கருணை தருபவன்! — இப்படிக் கடவுள் வரிசைகள், பெரு, நாட்டில், இருந்தன. பாவத்தைப் போக்கிக் கொள்ள, இரத்தாபிஷேகம் செய்தனர்—நரபலியும் உண்டு.

இந்த 'மதம்' மதிவழிப்பட்டதல்ல என்பதை, பெரு, நாட்டு மக்கள், உணர, நெடுங்காலம் பிடித்தது.

ஓல்கான்ஸ் ஓகி எனும் சிருஷ்டிக் கடவுளை, கனடாநாட்டுப் பழங்குடி மக்கள் வணங்கிவந்தனர். அந்தக் கடவுள் பூமியைப் பிளக்க ஒரு பாணத்தை ஏவினாராம். பூமிபிளந்ததாம். அதனால் ஆடவரும், பெண்டிரும் பிறந்தனராம்! இது, அவர்களின் தெய்வீகக் கதை. பெண்டிர் சூரியதேவனைத் தொழுவர், மாலை வேளைகளில், போர்வீரர்கள், நடனமாடி நாதனைத்தொழுவராம். ஒல்கான்ஸ் ஓகியை, இன்று கனடாவில் யாரும் வணங்குவதில்லை — மறந்தே போயினர். ஆனால் ஒரு காலத்தில், ஓகிமகேசனைத்தான், உண்மைக்கடவுள் என்று கொண்டாடினர்.

அந்தக் கட்டுக்கதைகளை, மக்கள், பரம்பரை பரம்பரையாகப் பேசி, ஒன்றைப் பத்தாக்கினர். அதே கதைகளை, கவிவாணர்கள், பிறகு அழகு படுத்தினர், கலைமெருகிட்டு. காவியங்கள் பலப்பல இயற்றப்பட்டன. அதன் பயனாக, அந்தக் கதைகளுக்கு, மதிப்பு மேலும் உயரலாயிற்று.

சந்தையிலும் சாவடியிலும் சாதாரண மக்கள் பேசிக்கொண்டிருந்த கதைகளில், சிலவற்றை, கவிநயமுணர்ந்தவர்கள், காவியங்களாக்கினதும், அவைகள் மாளிகைக்கும் அரண்மனைக்கும் ஏற்றவைகளாகி விட்டன.

கட்டுக்கதைகள், கடவுள் மகாத்மியங்களாக்கப்பட்டன. கோயில்களை அமைத்து, அங்கு கொலு வீற்றிருக்கச் செய்தனர், அந்தக்கதைகளிலேகுறிப்பிடப்பட்ட பாத்திரங்களை. தேர் திருவிழாவும், மந்திரச் சடங்குகளும், ஏற்பட்டன.

காவியத்தின் நயத்திலே ஈடுபட்டவர்கள் தந்த ஆதரவின் காரணமாக, வெறும் கட்டுக்கதைகள், மகத்துவம் பொருந்திய தேவமாக் காதைகளாயின! அவைகளைப் பிறகு, அறிவு வளர்ச்சியின் காரணமாக, சந்தேகித்தவர்களும், கேலி பேசினவர்களும் கண்டிக்கப்பட்டனர் — தண்டிக்கப்பட்டனர்.

காவிய நயம் எனும் மெருகு கிடைக்காததால், பல கதைகள், நாளாவட்டத்தில், மக்கள் மனதை விட்டு நீக்கப்பட்டுவிட்டன. இங்கும் காணலாம், இந்த உண்மையை. விஷ்ணு, பத்து அவதாரங்கள் எடுத்ததாகக் கூறுவர் — ஒவ்வொரு அவதாரமும் ஒவ்வொரு காரணார்த்தம் என்று வியந்து பேசுவர், ஆனால், 'தசாவதாரத்தில்' பெரும்பாலான மக்களுக்கு, இராமாவதாரம்-கிருஷ்ணாவதாரம்-எனும் இருகதைகள், தெளிவாகவும் அதிகமான அளவிலும் தெரிந்திருப்பது போல, மற்ற எட்டும் தெரியாது. மச்சம், கூர்மம், வராகம், வாமனம், போன்ற அவதாரங்களைப்பற்றிய காதைகளை அவ்வளவு அறியார்கள் — ஓரளவு அறிந்தவர்களும் கூட, இராம—கிருஷ்ண அவதாரங்களைப் போற்றிப் புகழ்கின்ற முறையிலும் அளவிலும், பூஜிக்கின்றவிதமாகவும், மச்ச கூர்மாதிகளைப் போற்றிப் பூஜிப்பதில்லை. பெரும்பாலும் இந்த இரு அவதாரங்களுக்கும் தான், பெரியகோயில்கள்-மற்ற எட்டும், கொட்டு முழக்கை அதிகம் கேட்பதில்லை! பத்தும், பக்தர்களின் கருத்தின்படி, பரந்தாமனின் அவதாரங்களே—எனினும், பெரும்பாலான மக்கள், பத்தில், எட்டை, அதிகம் அறியார்—ஏன்!

'இராம — கிருஷ்ண அவதாரங்களைப்பற்றி, காவியங்கள், இங்கு பெரும்பான்மையினரின் மொழியாக உள்ள தமிழில், ஏற்பட்டுவிட்டன—இராமாயணம் — பாரதம் — எனும் காவியமெருகேறிய கதைகள் மூலம், இராமனும் கிருஷ்ணனும், மக்களுக்கு, தலைமுறை தலைமுறையாக அறிமுகப்படுத்தப்பட்டு விட்டனர்- கூர்மாயணமோ, மச்சாயணமோ, தமிழில் இல்லை — எனவேதான், அந்த அவதாரங்கள் அவ்வளவாக, மக்கள் மனதிலே இடம்பெறவில்லை.

இதுபோலவேதான், பான்—கு; போன்ற சீனக்கடவுள்கள், அபஜிதான் போன்ற பெருதேசத்துப்பெம்மான்கள், ஆகியவற்றுக்காகப் பெருங்காப்பியங்கள் இல்லாமற் போகவே, மக்கள், அவைகளைச் சிலபத்திலேயும் விரைவிலேயும் மறந்துவிட முடிந்தது. காவியக் கவசம் போடப்பட்ட கடவுட் கதைகள், அறிவுப்படையின் மிகப் பலமான தாக்குதலுக்குப் பிறகே, தகர்க்கப்பட்டன. அந்த அறிவாயுதத்தை அமைக்கவே, எண்ணற்ற அறிஞர்கள், உயிரிழக்கவேண்டி நேரிட்டது. தாக்குதலின் விளைவாக, உயிரிழந்த உத்தமர்கள் கணக்கிலடங்கார். கட்டுக்கதைகளை நெட்டுருச் செய்து, கடவுளின் அருள்பெற்றவர்களென்ற விருது பெற்று, மோட்சலோக வழி காட்டிகள் என்ற பட்டம் சூட்டிக்கொண்டு, பலர் சிந்தனைத் தெளிவுள்ளவர்களைச் சித்திரவதை செய்திருக்கிறார்கள்.

மதத்தையோ, கடவுட் கொள்கையையோ, ஒழுக்கத்தையோ, உயர் பண்பையோ, அவர்கள் மறுக்கவேண்டும் என்பதில்லை, கடவுளின் லீலைகள் என்று கூறிக் கட்டப்பட்டுள்ள கதைகள், கருத்தைக் குழப்புவனவாக உள்ளனவே, ஆராய்ச்சி செய்தால், அந்தக்கதைகள் வெறும் கேலிக்கூத்தாகத் தெரிகின்றனவே, அவைகளிலே குறிப்பிடப்படும் சம்பவங்கள், ஆபாசமானவைகளாக உள்ளனவே, என்று இந்த அளவுக்குப்பேசினால் போதும், பேசுபவனின் தலைக்குத்தீப்பு வந்துவிடும். குருமார்கள் கொக்கரிப்பர்-மன்னன் மிரட்டுவான் - மக்கள் சீறுவர் - சிறையோ, தூக்குமேடையோ, அந்த 'நாத்திகர்களை' அழைக்கும்!

"ஆண்டவனே! இது என்ன அக்ரமம்!-என்று அப்போதும், ஆண்டவனைத்துதிக்கும் பக்கத்தனுக்குகூட இருக்கட்டும் மதஏடுகள்என்றுமதிப்பும் பெற்றுவிட்ட அந்தக்கட்டுக்கதைகளைச்சந்தேகித்தாலே, போதும், அவனுக்கு நாத்தீகப்பட்டம் - நாடாள்வோனின் தண்டனைகிடைத்துவிடும். அந்த அளவுக்கு இருந்துவந்த 'மதவெறி' மிக மிகக்குறைந்துவிட்டது இன்று-ஆனால் எவ்வளவு இரத்தாபிஷேகத்துக்குப் பிறகு!!

இப்போதல்லவா, ஒவ்வொரு கதைக்கும், பொருத்தமாக இருக்கிறதோ இல்லையோ, ஏதேனும் ஒரு தத்துவார்த்தம், கூறுகிறார்கள் இங்கு —ஒரு முப்பதாண்டுகளுக்கு முன்பு?

(12-ம்பக்கம் பார்க்க)

## பொன் விலங்கு

2-ம் பக்கத் தொடர்ச்சி

சபை என்றும் கலைக்கப்படமாட்டாது. மூன்றில் ஒருபகுதி அங்கத்தினர்களின் பதவி காலம் இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை புதுப்பிக்கப்படவேண்டும்.

நீதி வழங்க, சுப்ரீம் கோர்ட் எனும் பெரிய ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்படுகிறது. அதில் ஒரு பிரதம நீதிபதியும், மற்றும் எழுவருக்குக் குறையாத நீதிபதிகளும் யூனியன் தலைவரால் நியமிக்கப்பெறுவர். தலைமை நீதிபதிக்கு ரூ 5000 மாதச் சம்பளம். துணை நீதிபதிகளுக்கு ரூ. 4500. இந்தச் சுப்ரீம் கோர்ட்டில் செய்யப்படும் தீர்ப்புகள், இந்திய பூபாகத்திலுள்ள மற்ற நீதி மன்றங்களையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு உயர்தர நீதிமன்றம் இருக்கும். அந்தந்த மாகாணத்தின் தேவைக்கேற்ற அளவில், நீதிபதிகளின் எண்ணிக்கையையும் யூனியன் தலைவர் தீர்மானிப்பார். அதன்படி தொடர்புடைய மாகாண கவர்னரையும், பிரதம நீதிபதியையும் கலந்துகொண்டு மற்ற நீதிபதிகள் தலைவரால் நியமனம் பெறுவர்.

பிரதம நீதிபதிக்கு மாதச் சம்பளம் ரூ. 4000. மற்ற நீதிபதிகளுக்கு ரூ 3500-க்குக் குறையாமல் இருக்கும்.

யூனியன் பார்லிமெண்டின் அதிகார வரம்பிற்குள்பட்டது 91 இனங்கள் என்றும், மாகாண வரம்பிற்குள்பட்டது 66 இனங்கள் என்றும், இரண்டுக்கும் பொதுவானது 37 என்றும் குறித்துவிட்டு, எஞ்சிய விஷயங்களை யூனியன் அதிகாரத்திற்குள்ளாக்கி இருக்கிறது.

யூனியன் பார்லிமெண்டுக்கும், மாகாணங்களுக்கும்வருமானத்தைப் பகிர்ந்துகொள்ளும் முறையில் புதிய மாற்றம் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆனால், புதிய அரசியல் அமைப்பு அமுலுக்கு வந்து, ஐந்து வருஷம் ஆனதும் இத்துறையில் ஆராய்ந்து தக்கது செய்ய ஒரு பொருளாதாரக் குழுவினை அமைக்க ஏற்பாடு இருக்கிறது.

அடிப்படை உரிமைகள் என்று சில உரிமைகள், அழகான வார்த்தைகளால் அலங்காரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வளவும் அமைதி, பாதுகாப்பு என்னும் பெயரால் பறிக்கப்பட்டு விடுகிறது. காரணம் காட்டாமலே, விசாரணைக்குக் கொண்டுவராமலே, தனிமனிதனை நீண்ட காலத்திற்குக்காவலில் வைத்திருக்க, யூனியன் தலைவருக்கும், மாகாண கவர்னர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வழிகாட்டும் தத்துவங்கள் என்று சில உயர்ந்த பண்புகளைச் சேர்த்திருக்கிறார்கள் திட்டத்தில். அதனை நிறைவேற்றியாக வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால், அவைகளை நினைவில்வைத்துக்கொண்டு, சட்டங்கள் இயற்ற வேண்டுமென்று அறிவிக்கப்படுகிறது.

அகிம்சை-சத்தியம்என்னும் இரு உயர்ந்த பண்புகளைப் பேச்சில்மட்டும் அல்லாமல், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மேற்கொண்டு செயலாற்றி வந்த தூயவர், ஏற்படுத்தத்தவறிவிட்டசிறந்தபண்புகளை, அவர் வழிவந்ததாக எதற்கெடுத்தாலும் கூறிக்கொண்டிருக்கும் நாடாளும் இவர்களுக்கு, அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வழிகாட்டிகள் ஒருவித புதியநிலையையும் உண்டாக்கப் போவதில்லை. காந்தியார் தவறிவிட்டதை, இந்த எழுத்துகளால் சாதித்துவிட முடியாது! ஆனால், ஆளவந்தார்களின் அதிக்கிரமச் செயல்களை, இதன் மூலம், சிலகாலம் உலகத்திற்குத் தெரியாமல்மறைத்துவைக்கமுடியும்.

நாட்டில் உள்ள வறுமை, வேலையற்ற கொடுமை, கல்வியற்ற மடமை முதலியவற்றைப் போக்குவதற்கு, இந்த அரசியல் திட்டத்தில் எந்தவித உறுதிப்பாடும் கிடையாது. சாதாரண மக்களால் இந்த அரசியல் அமைப்பு ஆக்கப்பட்டிருக்குமானால், இவைகள்தான் முக்கிய இடம்பெற்றிருக்கும்.

தொழிலில் சிறந்த வடநாடு, இத்துணைக்கண்டத்தின் மற்றப் பகுதிகளைச் சுரண்டவும், மற்றப்பகுதிகளின் தொழில்வளம் பெருகாமல் வெறும் வடநாட்டிற்குச் சந்தையாக இருக்கவும், ஏற்படுத்தப்படும் அரசியல் அமைப்பே இதுவன்றி, மக்களுக்கு நலம்பல தேடும் நல்லமைப்பு ஆகாது.

பலம் பொருந்திய இந்திய சர்க்காரும், வெறும் எடுபிடி வேலைக்குத் தகுந்த முறையில் உள்ள பலமற்ற மாகாண சர்க்கார்களும் வேண்டுமென்று பட்டேல் போன்ற தேசியத் தலைவர்கள் மட்டுமன்று, பிர்லா போன்ற ஆலை அரசர்களும் விரும்பி விளக்கமுரைக்கிறார்கள். தேசியத்திற்கும்—முதலாளிகளுக்கும் இது விஷயத்தில் அடிப்படை ஒற்றுமை இருப்பது கவனத்தில் இருத்தத்தக்கது. பண்டிதரின் சமதர்மம், இத்துடன் ஒத்தும் இருக்கிறது! அடிப்படை வேற்றுமை இருப்பின், சமதர்மம்-தேசியம்—முதலாளித்துவம் இவ்வளவும் ஒரே பாதையில் செல்ல முன்வருமா? செல்லுகிறது—பார்க்கிறோம்! பண்டிதரின் சமதர்மமே சமதர்மம்!!

இந்த நாட்டில் ஜனநாயகக் கோட்பாடு வெறும் மேல்பூச்சாகத்தான் இருக்கிறது; வேர் ஊன்றவில்லை என்று டாக்டர் அம்பேத்கார் அன்றொரு நாள் அரசியல் ஆக்க மன்றத்திலே அறிவித்தார். பெருந்தொகையினர் படித்திருந்தும், அதுவும் பயனுள்ள கல்வி பெற்றிருந்தும், மக்கள் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் மிருக இயல்பைச் சீறி எழச் செய்து, வெறும் வார்த்தைக்கு அடிமையாக்கி, அவர்கள் வாக்குகளையே விலைபாகப் பெற்று, உலக மக்களைக் கொன்று குவிக்கும் கொலைக்கூடம் நிர்மாணித்து, நினைத்துப் பார்ப்பதற்கே பயங்கரமான நிலையை பின்சந்ததியாருக்கு விட்டுவிட்டு, காணாப் பிணமாக மண்ணில் மறைந்துவிட்ட ஹிட்லர் போன்றோர், மக்களாட்சி பண்பு வேரூன்றாத இந்த நாட்டில், பலர் தோன்றக் கூடும் என்பதில், எவருக்கும் சந்தேகம் இருக்க நியாயமில்லை. புதிய அரசியல் அமைப்பு அதற்கான வழிவகை செய்கிறது. வெள்ளையர் தயாரித்தது, இரும்பு விலங்கானால், 'நம்மவர்' நாட்டு மக்களுக்குத் தயாரித்திருப்பது 'பொன் விலங்கு' என்றுதான் சொல்லவேண்டும். இரண்டும் மக்களை ஒடுக்கும் விலங்குகள்தான். இருந்தாலும் மக்கள் இதனைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. காரணம், இதற்கு 'தியாகம்' என்னும் பொன்முலாம் பூசப்பட்டிருக்கிறது.

# திராவிட நாடு

காஞ்சி] 5—12—48 [ஞாயிறு

## ரவிஸ்தான்

●

"சீக்கியர்கள் தனிநாடு கேட்கவில்லை—பாகிஸ்தான் போன்றதோர் கோரிக்கையை வற்புறுத்தவில்லை. நாடு, மீண்டும் துண்டாடப்படுவதைச் சீக்கியர் விரும்பவில்லை. நான், உறுதி கூறுகிறேன், சீக்கியர், சீக்கிஸ்தான் கேட்கப் போவதில்லை. ஆனால்..............."-- சர்தார் பலதேவ்சிங், பண்டித ஜவஹரின் முன்னிலையில், இது போலப் பேசினார், சின்னாட்களுக்கு முன்பு, குருநானக் விழாவின்போது.

ஏராளமான சீக்கியர்கள் கூடியிருந்தனர், விழாவன்று-- அப்போது சர்தார் பலதேவ்சிங், பண்டிதநேருவுக்கு, இந்த உறுதிமொழி அளித்தார்.

ஏன், தேவைப்பட்டது இந்த உறுதிமொழி? காரணமின்றிக்கிளம்பாதே, இந்தப் பேச்சு! சர்தார் பலதேவ்சிங், ஏன் சீக்கிஸ்தான் பற்றிப் பேச நேரிட்டது?

சீக்கியர்கள், தனிநாடு தேடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ஏதேதோ தகவல், எங்கெங்கிருந்தோ புகார் கிடைத்திருக்கா விட்டால், குருநானக் விழாவின்போது, சீக்கிய மார்க்கத்தின் மாண்பையும், குருநானக்கின் உபதேசத்தின் மேன்மையையும் பற்றிப் பேசவேண்டிய இடத்தில், சீக்கியர்கள் தனிநாடு கேட்கப் போவதில்லை-- நாட்டைத் துண்டாடப் போவதில்லை, என்ற பேச்சு, ஏன் எழப்போகிறது.

வானம் இருண்டு, வாடைக்காற்றும் வீசி, குமுறலும் கேட்டால் தானே, மழை வருமா வாராதா என்ற பேச்சுக் கிளம்பும். அதுபோலவே, அங்கு ஏதோ ஓர்வகையான, 'கவலைக் குறி' தெரிகிறது-அதுபற்றிப் பண்டிதரும் பிறரும் அச்சமடையக் கூடும் என்று, சர்தார் பலதேவ் சிங்குக்குத் தோன்றுகிறது-எனவேதான், அவர்; பண்டிதருக்கு உறுதி கூறுகிறார், அவர் உள்ளத்தைக் குளிரச்செய்கிறார் சீக்கியர் தனிநாடு கேட்கமாட்டார்கள்—என்று.

உண்மையிலே, அங்குள்ள நிலைமை என்ன? எவ்வளவு மறைத்தும், சிறு சிறு கீறல்கள், தெரியத் தொடங்கிவிட்டன. சீக்கியரின் மனதில், திருப்தி இல்லை— அவர்கள் ஏதோ ஓர் இலட்சியத்தைப் பற்றி எண்ணவும் பேசவுமாக இருக்கிறார்கள். அந்தப் பேச்சு, டில்லிவரை எட்டியிருப்பதுடன், பண்டிதர் கவலைப்படவேண்டிய அளவுக்கு, பலதேவ்சிங் ஆறுதல் கூறவேண்டிய அளவுக்கு, வலுப்பெற்றுவிட்டது.

சீக்கியர், இந்துக்களல்ல. அவர்கள், ஜாதியை வெறுப்பவர்கள்—வைதிகச்சடங்குகளை வெறுப்பவர்கள்—வேதகாலக் கோட்பாடுகளையும் வர்ணாஸ்ரம முறைகளையும் வெறுப்பவர்கள், விக்ரக வணக்கம் அவர்களுக்குக் கிடையாது.

கடவுளின் அருளைப்பெற, சீக்கியர்கள், நல்வாழ்க்கை, நல்லொழுக்கம், நற்செய்கை ஆகியவற்றைத் தான் முக்கியமானவைகளாகக் கொண்டுள்ளனரே யன்றி, அபிஷேகம் ஆராதனை, ஆகியவற்றினை அல்ல.

குருநானக்கின் போதனைகளும், அவருடைய உபதேசங்களை மேலும் பரவச் செய்த சீக்கிய குருமார்களின் உபதேசங்களும், வடநாட்டிலே புதியதோர் மார்க்கத்தை மட்டுமல்ல, புதியதோர் சமுதாயத்தையே அமைத்திட வழி செய்தது. இந்து மதத்தில், காலத்தாலும் கயவரின் ஜாலத்தாலும், ஏற்பட்ட கறைகளை நீக்குவதற்காக, அவ்வப்போது நடைபெற்ற, மாசுதுடைக்கும் காரியமாக, சீர்திருத்தமாக, மட்டும் அமைந்ததல்ல, சீக்கிய மார்க்கம்.

இந்துமதத்தின், ஆணிவேரை அறுத்து எறிந்தது, புதிய மார்க்கம்—வர்ணாஸ்ரமத்தை மறுத்துவிட்டது—ஜாதி கூடாது என்று தெரிவித்துவிட்டது. சீக்கியர் உண்டு — அவர்களிலே 'பிரம்ம—க்ஷத்ரிய—வைசிய—சூத்ர, எனும் முறை கிடையாது.

அனைவரும் ஆண்டவனின் அருமைப் புதல்வர்களே — அவர்களுக்குள் ஜாதியைப்புகுத்துவது கூடாது, என்று கூறிக் கிளம்பிய, புரட்சி மார்க்கம் சீக்கிய மார்ககம்.

புத்தர் காலத்துக்குப் பிறகு, இந்தத் துணைக்கண்டத்திலே, இந்து மதத்தின் அடிப்படை என்று கருதப்பட்டு, வலியுறுத்தப்பட்டுவந்த, வர்ணாஸ்ரமத்தை நீக்கிய அறிவுப் புரட்சி, சீக்கிய மார்க்கம்.

வியாசரும் வசிஷ்டரும், மனுவும் மாந்தாதாவும் எந்த வர்ணாஸ்ரமத்தை வலியுறுத்தினரோ, எந்த வர்ணாஸ்ரமத்தைப் பன்னெடுங்காலமாக 'இந்துக்கள்' புனிதமானது, ஆண்டவனின் கட்டளைபோன்றது, என்று நம்பி வந்தனரோ, அந்த வர்ணாஸ்ரமத்தை வெறுத்து, அடியோடு விட்டொழித்தவர்கள், சீக்கியர்.

இந்துமதத்தின் மற்றோர் அடிப்படைத் தத்துவமான, உருவவணக்கத்தையும், சீக்கிய மார்க்கம், விட்டுவிட்டது. குழலூதும் கடவுள், இடதுகாலைத் தூக்கி நின்றாடும் தெய்வம், மயிலேறும் குகன், என்பனபோன்ற, உருவ வணக்க முறையை மேற்கொள்ளாமல், ஆண்டவனின் அருளைப்பெற, அறநெறியே தேவை என்று கூறினர், சீக்கியர்கள்.

வெளிநாட்டிலிருந்து இங்கு பரவிய ஜாதியற்ற, உருவ வணக்கமற்ற இஸ்லாம் ஒருபுறமும், உள்நாட்டிலே வேதகாலத்திலிருந்து வேரூன்றிப் போயிருந்த வைதிக வர்ணாஸ்ரம இந்து மார்க்கம், மற்றோர் புறமும், இருந்துவந்தபோது, சீக்கிய மார்க்கம் கிளம்பி, மக்களைச் சீலர்களாகவும், வீரர்களாகவுமாக்கிற்று. வர்ணாஸ்ரம முறை ஒழிந்துபோனதால், சீக்கியர்கள், ஓர் கட்டுப்பாடான, ஒற்றுமையான, சமுகமாயினர். உருவ வணக்கத்தை மேற்கொள்ளாததால், போலிச்சமய காரியத்தில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தமின்றி, தூய்மையையும் வாய்மையையும், மக்களின் துயர் தீர்க்கும் காரியம் செய்வதையுமே, முக்கியமெனக் கொண்டு, புதியதோர் பொலிவுடன் விளங்கினர்.

அவர்களின் எழுச்சியை, இஸ்லாமிய மன்னர்கள் அழிக்க எடுத்துக் கொண்ட பயங்கரமான முயற்சிகளின் காரணமாக, அதுபோதே சீக்கிய குருமார்களும் தலைவர்களும் கஷ்ட நஷ்டத்துக்கு ஆளானதன் காரணமாக, சீக்கியருக்கும் இஸ்லாமியருக்கும், தீராப்பகை வளர்ந்ததே யன்றி, மார்க்கத்துறையை மட்டும் கவனித்தால், இருநெறிகளும், ஒன்றை ஒன்று விரோதித்துக் கொள்ளவேண்டிய அவசியமே இல்

லாதவிதமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்து மார்க்கத்துக்கும் சீக்கிய மார்க்கத்துக்கும் அப்படி ஒற்றுமையான கருத்து இருப்பதாகக் கூற முடியாது. இந்து, வர்ணஸ்ரமி—சீக்கியருக்கு ஜாதி கூடாது! இந்துவுக்கு உருவ வணக்கம் உண்டு, சீக்கியருக்குக் கிடையாது.

இப்போது, சீக்கியர்கள், தாங்கள் ஓர் இந்து ராஜ்யத்தில் பிணைக்கப்பட்டிருப்பதை உணருகிறார்கள்—அந்த நிலைமை அவர்களுக்குத் திருப்தி தரவில்லை—தராது.

ரவி நதிக்கரைக்கருகே அவர்கள் அமைத்து ஆண்மையுடன் ஆண்டு வந்த பழையராஜ்யங்களைப்பற்றியும், அவர்களின் மூதாதையர் நடத்திய தீரமான போர்களைப் பற்றியும், எண்ணிப் பூரிப்படையாத சீக்கியர் இருக்கமுடியாது. பூரிப்பு முதலில்! பிறகு, இன்று, ஓர் இந்து ராஜ்யத்திலே, 'சிறுபான்மைச் சமூகமாக' மட்டுமே கருதப்படும் நிலையில் இருக்கவேண்டி ஏற்பட்டுள்ள அமைப்பு முறையை எண்ணும்போது, பெருமூச்சுப் பிறக்கிறது.

அந்த நாளில்! நமது ராஜ்யத்தில்! —என்ற ஆர்வ அலைகள் மனதிலே எழாதிருக்குமா!

என்ன இருந்தாலும் அவர்கள் இந்துக்கள்—நாம் சீக்கியர்—அவர்கள் தருபவர்களாகவும், நாம் பெறுபவர்களாகவுமன்றோ இருக்கிறோம்—ஏன் நமக்கென ஓர் தாயகம்—நமக்கென ஓர் தனி அரசு, இருக்கக் கூடாது. இந்துக்களுடன் நாம் இணைபிரியா நண்பர்களாக இருப்போம், ஆனால், தனி நாடு பெற்று அந்த நட்பையும் இழக்காமல் இருக்கலாகாதா—முடியாதா—என்று எண்ணுகின்றனர்.

ஏன் முடியாது! திபெத் இல்லையா—நேபாளம் இல்லையா!—என்று பதிலும் கிடைக்கிறது.

இந்தப் பேச்சுத்தான், டில்லிக்கு எட்டி இருக்கிறது, எட்டியாகவுமிருக்கிறது. சர்க்காரிலே ஒருவர் என்ற காரணத்தால், சீக்கியர் தனிநாடு கேட்கமாட்டார்கள், என்று சர்தார் பலதேவ்சிங், பேசித்தான் தீரவேண்டு கடமை அது. ஆனால், அவரும், ஒரு ஆனல் போட்டிருக்கிறார்.

என்ன அந்த ஆனல்? "சீக்கியர் தனிநாடு கேட்கவில்லை, ஆனல், வகுப்புவாதத்தை நீக்குவது என்ற திரை போட்டுக்கொண்டு சீக்கியருக்கு, நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளைக் கூடப் பறித்துவிடுவோர்களோ என்ற அச்சம், சீக்கியருக்கு ஏற்பட்டிருக்கிறது, புதிய அரசியல் அமைப்புத் திட்டம், இந்த அச்சத்தைத் தருவதாக இருக்கிறது—" என்று சர்தார் பலதேவ்சிங் கூறினர்.

உரிமை பறிபோகுமோ—என்ற அச்சம் இருக்கிறது என்பதைப் பலதேவ்சிங்கே கூறுகிறார். நியாயமான உரிமைகளைப் பறிக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறார். புதிய அரசியல் திட்டம், சீக்கியரின் நியாயமான உரிமைகளை அழித்துவிடக்கூடும் என்ற அச்சம், சீக்கியரிடையே இருப்பதை நினைவூட்டுகிறார். ஆனல் தனிநாடு, கேட்கவில்லை, என்று உறுதி கூறுகிறார்.

இவர் கூறும், ஆனல் வேறொரு தலைவருக்கு, ஆகையால் ஆகிவிட்டிருக்கிறது.

வகுப்புவாத ஒழிப்பு என்ற சாக்குக் கூறிக்கொண்டு, புதிய அரசியலின்படி, சீக்கியருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமையைப் பறிப்பார்களோ, என்றபயம் உண்டு, ஆனல்..............என்று பலதேவர் பேசுவதை, மாஸ்டர் தாராசிங்........ உரிமை பறிபோகும் என்ற பயமிருக்கிறது, ஆகையால் சீக்கியருக்குத் தனி நாடு, தனி ஆட்சி வேண்டும் என்று கூறுகிறார்.

மாஸ்டர் தாராசிங், சீக்கியத் தலைவர்-பலதேவ்சிங்குகளின் பாலபருவ முதற்கொண்டு, சீக்கியத் தலைவராக இருந்து வருபவர். அவருடைய உரிமை முழக்கம், டில்லி வட்டாரத்தினரின் உள்ளத்தில் அச்சமூட்டுவதாக இருக்கிறது. அவருடைய வீர உரைகேட்டு, எண்ணற்ற சீக்கியர்கள், ரவிஸ்தான் வேண்டும், என்ற இலட்சியத்தை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

மாஸ்டர் தாராசிங்கின் பேச்சு, டில்லி வட்டாரத்தினருக்கு வேம்பு—எனவே, இமயமுதல் குமரிவரை உள்ள ஏடுகள், இருட்டடிப்புச் செய்துவிட்டன—அவருடைய பிரசாரம் எந்த அளவில் இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது.

ஆனல், குருநானக் விழாவிலே, குமுறும் நெஞ்சைக் குளிரச்செய்யும் முறையிலே, பலதேவ்சிங் பேசவேண்டிய அளவுக்கு ரவிஸ்தான் பேச்சுப் பரவி இருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது.

ரவிஸ்தான்-அல்லது சீக்கிஸ்தான் கோரிக்கை வெற்றி பெறுமா அல்லவா, என்பது பற்றி அல்ல இப்போது, நாம் யோசிப்பது. இந்திய துணைக்கண்டத்திலே, பல்வேறு பகுதிகளிலேயும், உரிமை பறிபோகாதிருக்கவேண்டும் என்ற எழுச்சிக் குரல் கிளம்பியிருக்கிறது, என்பதை எடுத்துக் காட்டவே இதனைக் கூறுகிறோம்.

சீக்கியரின் உரிமையைப்பாதுகாத்துக் கொள்வதற்கு, என்ன வழி, என்ன திட்டம், என்பதிலே, மாஸ்டர் தாராசிங்குக்கும் சர்தார் பலதேவ்சிங்குக்கும், கருத்து வேற்றுமை இருக்கலாம்-இருக்கிறது-ஆனல், நோக்கம் இருவருக்கும் ஒன்றேதான், சீக்கியரின் உரிமை பறிபோகக்கூடாது - வகுப்புவாதத்தை ஒழிப்பதாகச் சாக்குக் கூறிக்கொண்டு, சீக்கியரைச்சீரழிவு செய்யக் கூடாது என்பதுதான்.

●

## வேலை நிறுத்தப்புயல்

1. ரயில்வே தொழிலாளர்.
2. துறைமுகத் தொழிலாளர்.
3. தபால் இலாகாத் தொழிலாளர்.

எனும் இம்மூன்று முக்கியமான துறையினரும், வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று தெரிகிறது. ஒரே சமயத்தில், இம்மூன்று வேலை நிறுத்தங்களையும் நடத்தத் திட்டமிட்டு வருவதும் தெரிகிறது.

இம்மூன்று துறைகளிலும் வேலை நிறுத்தப் புயல் அடித்தால், நாட்டுக்கு, பெரியதோர் தொல்லைமட்டுமல்ல, நெருக்கடி ஏற்படுவதுடன், வெளி உலகிலே இன்றைய ஆட்சியாளர்களைப்பற்றியுள்ள மதிப்பு மங்கும். பொதுமக்களுக்கும்பாட்டாளிகளுக்கும், இந்தப் புயல் மிகுந்த சிரமத்தை சங்கடத்தைக் கொடுக்கக் கூடியவை.

இந்த நெருக்கடியை ஏற்படவிடாதபடி-அடித்தும், அடக்குமுறையாலும் அல்ல-சிறையில் பலதலைவர்களை அடைத்து அல்ல—நன்னெறியின் துணைகொண்டு, பாட்டாளிகளின் அன்பைத்திரட்டி - தடுக்க வேண்டும் - விரைவில்.

# சர். சி. வி. இராமனுக்கு அன்பழைப்பு

★

புத்தம் புதிய ப்யூக் மோட்டாரிலே பவனி வருவது—புராதன இந்திய நாகரிகத்தை, வாழ்க்கை முறையைப் பாராட்டுவது!

அமெரிக்கா தயாரித்தனுப்பும் மோட்டாரிலே சவாரி செய்துகொண்டே, ஆகமகாலத்தைப் பாராட்டி, ஆஹா! ஊஹூ-என்று புகழ்ந்து பேசுவது! வெளிநாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பும் அளவுக்கு, புதிய உலக அமைப்பில் பங்கு கொள்வது, அதேபோது வேதகாலத்தைப் புகழ்வது!

இந்தப் போக்கு, தவறானது—அறிவுக்குப் பொருத்தமானதாகாது—நாணயமான முறையுமல்ல—என்பதை நாம் பலமுறை வலியுறுத்திக் கூறும்போதெல்லாம், மடிசஞ்சிகளுக்கும் மன்னார்சாமிகளுக்கும், பிரமாதமான கோபம் வருவது வழக்கம் உண்மைதானே, ஏன், நவீன நாகரிகத்தை அனுபவித்துக்கொண்டே, பழைய முறையைப் பன்னிப் பன்னிப் பேசிப்பாராட்ட வேண்டும்—இரண்டிலே, ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ளலாகாதா—என்று எண்ணிப்பார்க்க மறுக்கின்றனர் பாமரமக்கள்! அவர்களை, ஏமாளிகளாக்குகின்றனர் எத்தர்கள். ப்யூக் மோட்டாரில் சவாரி செய்துகொண்டு, புராதன வாழ்க்கை முறையை ஆதரித்துப் பிரசாரம் செய்யும், போக்கு, கண்ணகியிடம் மாதவியின் அழகுபற்றிப் பேசும் போக்குப் போன்றது, என்று நாம் கண்டிக்கும் போதெல்லாம், கமண்டலக் கருத்தினரும் குண்டலப் போக்கினரும், கொக்கரித்தனர், "ஏ! கொடியவனே! கெடுமதியாளனே! பார், உன்னை என்னென்ன பாடுபடுத்துகிறோம்" என்று மிரட்டினர்.

### சர். சி. வி. இராமன்

உலகறிந்த விஞ்ஞானி—பார்ப்பனர்; ஆனால் பிரசாதம் தேடி, குளத்தங்கரை நாடிடும் பேர்வழியல்ல—வேதத்திலே பிரபஞ்ச ரகசியம் இருக்கிறது, 'உபநிஷத்திலே உலகின் உண்மை இருக்கிறது, அதர்வணத்திலே, அகிலஉலகும் வியந்து பாராட்டக்கூடிய அதிஅற்புதமான கருவிகளைச் செய்வதற்கு ஆதாரமாகப்பல சுலோகங்கள் உள்ளன, என்று வீம்பு பேசிவிட்டு உருண்டையைத் தின்றுவிட்டு உலவும் உலுத்தரல்ல—மேனாட்டாரும் கண்டு வியக்கக்கூடிய விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடத்திக் காட்டினவர்—புது அறிவுகொண்டு—விஞ்ஞான அறிவுகொண்டு—விபூதி மகிமையால் அல்ல—சஹஸ்ரநாமத்தை ஜெபித்து அல்ல—துளசி தீர்த்தத்தைத் தெளித்து அல்ல!

அவர் பெற்ற அறிவும் புகழும், கோயில் தீவர்த்திகளின் ஒளி முன்போ, கொளுத்தப்படும் கற்பூரார்த்தியின் முன்போ பெற்றதல்ல. ஆராய்ச்சிச் சாலையில் அமர்ந்து, நெடியுள்ள ஸ்பிரிட் விளக்கின் முன் உட்கார்ந்து, நடத்திய ஆராய்ச்சிகளின் மூலம் உண்மை பலவற்றைக் கண்டறிந்தார் - உலகுக்கு உரைத்தார்—உலகுக்குச் சில புதிய உண்மைகளைக் கூடப் பரிசளித்திருக்கிறார். 'சமித்து'களைச்சேகரித்துக்கொண்டு, ஓமகுண்டத்தின் முன், உட்கார்ந்து அல்ல, கண்ணாடிக் குழாய்கள் அமைக்கப்பட்ட, ஆராய்ச்சிச் சாலையில் அமர்ந்து அரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார். கங்கா, யமுனா, போன்ற புண்யதீர்த்தங்களில், அரித்துவாரம், காசி, காஞ்சி, போன்ற திவ்ய க்ஷேத்திரங்களின் மண்ணைக் கலக்கி, அதன்மூலம், அல்ல அவர் அகிலம்புகழும் உண்மைகளைக் கண்டுபிடித்தது—கண்ணாடிக் குழாய்களில் (Test Tubes) விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட பலவண்ண நீரை நிரப்பி, ஆராய்ச்சி நடத்தி, அரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்.

உலகிலே பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார் — அவர் போகாத நாடுகளிலேயும் அவர்புகழ் சென்றிருக்கிறது, அப்படிப்பட்ட அறிஞர், "நான் அரசியல்வாதியல்ல—மனதிலே பட்டதைத் திட்டமாகத்தான் எடுத்துக்கூறிவிடுவேன்—அதுதான் என்வாடிக்கை. அமெரிக்கா தயாரித்தனுப்பும் புத்தம்புதிய ப்யூக் மோட்டாரில் சவாரி செய்துகொண்டே, பண்டைய நாகரிகத்தை, வாழ்க்கை முறையை மீண்டும் காணவேண்டும் என்று பேசிப்புகழ்வதை அறிவுக்குப் பொருத்தமானதென்று என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது." என்று கூறுகிறார்.

சென்றகிழமை பெங்களூரில்பேசியிருக்கிறார் பேரறிஞர் இராமன், இதுபோல.

அறிவுடைமையல்ல இந்தப் போக்கு என்றுகண்டிக்கிறார். நவீன நாகரிகத்தின் பலன்களையும் தேடித்தேடி அனுபவித்துக்கொண்டு, புராதனம்! பண்டைய நாகரிகம்! பூர்வீக ஐதீகம்! என்று பேசிப்புகழ்பவரின், போக்குக்கு, சர். சி. வி. இராமனின் கண்டனம் கிடைத்ததுகாண நாம் மிகவும் மகிழ்கிறோம். அறிஞர்கள் இவர்போல, அடிக்கடி திட்டமாகத் தெளிவாக, அச்சமின்றிக் கண்டித்தால்தான், இந்நாட்டு 'அமாவாசை ராகுகாலங்களுக்கு" சொரணை பிறக்கும்.

நாம், இதேவிஷயத்தை விவரமாகவும் விளக்கமாகவும் பேசும்போது, சுலபத்திலே நம்மீது பழி சுமத்தவும் வெறிகொண்டு நம்மீது பாயவும் முடிகிறது— வகுப்புவாதி — பிராமணத்துவேஷி — நாஸ்திகன்— என்றெல்லாம் பேசி ஏசமுடிகிறது. சர். சி. வி. இராமனை, என்னசொல்லி ஏசமுடியும்! அவர் ஓர் பார்ப்பனர்! மடிசஞ்சிகளின் மரமண்டையிலே பலமான அடி கொடுக்கிறார், 'அறிவோடு நடந்துகொள் — பழமைபற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொண்டிராதே' என்று அறிவுரை தருகிறார். சிலர் புதுமையை அனுபவித்துக்கொண்டே, பழமைக்குத் தாசராகிக்கிடக்கும் போக்கை, எள்ளிநகையாடுகிறார்.

"பழையகால முறைக்கு நாடு செல்லவேண்டும் என்று கூறுபவர்களிலே நான் ஒருவனல்ல" என்று சர். சி. வி. இராமன், அன்றையகூட்டத்தில் தெளிவாகக்கூறியிருக்கிறார்.

சர். சி. வி. இராமன், பல விஞ்ஞான உண்மைகளைக் கண்டு பிடித்துப்புகழ் பெற்றிருக்கிறார்—இந்நாட்டிலே அறிவாளிகள் என்று விருது பெற்றுக்கொண்டு, மேனாட்டு விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்திக்கொண்டு அதேபோது பூர்வீகப் பெருமைபற்றியும் பிதற்றிக்கொண்டிருக்கும் போக்கினர் இருக்கின்ற

னர், என்ற உண்மையைக் கண்டறிந்தாரே, இந்தக்கண்டுபிடிப்பு, அவருடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப்போலவே, மிக மிக முக்கியமானது, தேவையானதுமாகும்.

சர். சி. வி. இராமனைப்போன்றவர்களின் அபூர்வக் கண்டுபிடிப்புகளின் மேன்மையை, பயனை, நாட்டுமக்களிலே, எவ்வளவு பேரால், உணர முடிகிறது? விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைக்கண்டு ஆச்சரியப்படும் பாமர மக்கள், அடுத்த நிமிடமே, விஞ்ஞானத்தின் விசேஷத்தை மறந்து விடுவதுடன், பழையபடி, வேப்பிலையின் மகிமையைப் பற்றியும், சாணியைப் பிள்ளையாராக்கினால் அதிலே புழு புகாதது பற்றியும், பாம்புப் புற்றுக்குப்பால் ஊற்ற வேண்டிய மதக் கடமையைப்பற்றியுமே எண்ணத் தொடங்குகிறார்கள். விஞ்ஞானத்தின் சிறப்பு, மத, மாந்தரீகங்களின் முன்பு, மிகமிகச் சாமான்யமாகத் தோன்றி விடுகிறது.

பாமரமக்களை இவ்விதமான மனப்பான்மை கொள்ளும்படி செய்பவர்கள், சர். சி. வி. இராமன் கண்டித்தாரே, ப்யூக் மோட்டாரில் ஏறிக்கொண்டுபோய் புராணகாலத்தைப் புகழ்ந்து பேசும் புண்யவான்கள் தான்!

நெற்களஞ்சியத்திலே புகுந்து கொள்ளும் எலிகள்போல, பச்சைப் பயிரைப் பிடித்துக்கொள்ளும் நச்சுப்பூச்சிகள் போல, இந்த "இருதாரப்பிரியர்கள்" கேடு செய்கிறார்கள்.

சர். சி. வி. இராமன், இவர்களால், விளையும் கேடுகளைச்சற்று ஆராய்ந்து பார்த்தால், திகைத்துப் போவார்! விஞ்ஞானவளர்ச்சியின் மூலம், ஒரு பக்கம், நாட்டு நிலை உயர்ந்து கொண்டே போகையில், அதே போது, பழைமைமோகத்தின்காரணமாக, நாடு மற்றோர்புறம், நசித்துக் கொண்டு போவதையும், அவர் அறியலாம்.

அவருடைய ஆராய்ச்சிச் சாலையிலே, வேலைக்கமர்ந்து ஒரு கெடு மதியாளன், பணமும் பெற்றுக் கொண்டு, பணிவிடை புரிவதாகவும் பாசாங்கு செய்துகொண்டு, அவர் அறியாவண்ணம், அவருடைய ஆராய்ச்சித் திறமையையே குறைவாகப்பேசிக்கொண்டு, உள்ளிருந்தே கெடுத்துக் கொண்டும் இருந்தால், சர். சி. வி. இராமனுக்கு மனம் எவ்வளவு வேதனை அடையும்? அது போலவே, தற்கால வசதிகளையும், விஞ்ஞானம் தரும் வாய்ப்புகளையும் ஒருதுளி கூட அனுபவிக்காமலிருப்பதில்லை, அதேபோது பழங்காலப் பெருமையைப்பற்றிப் பேசாமலிருப்பதில்லை-விஞ்ஞான வித்தகர் கூறியபடி, ப்யூக்மோட்டார் ஏறிச் சென்று புராணம் பேசுபவர் மட்டுமா, ரேடியோவுக்கருகில்இராமன்படம்மாட்டியிருப்பவர்கள், அட்லாசுக்குப் பக்கத்தில் பஞ்சாங்கத்தை வைத்திருப்பவர்கள், எனும் இப்படிப்பட்ட விசித்திரப் போக்கினர், இந்நாட்டில் ஏராளம்.

பழைமையில், பண்டையநாகரிகத்தில், அவர்களுக்கு உண்மையிலேயே பற்றும் பாசமும், மதிப்பும் நம்பிக்கையும் இருந்தால், இந்த நாகரிக, நவீன, விஞ்ஞான, வசதிகளைப் பெறவும் அனுபவிக்கவும், பயன்பெறவும் கூச வேண்டாமா? வெட்கப்பட வேண்டாமா? காணோமே, வெட்கம்! மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு வால்மீக முனிவர் தீட்டிய இராமாயணத்தைப்பார்ப்பதும், இரயில் ஏறிக்கொண்டு ராமேஸ்வர யாத்திரை போவதும், கருட உற்சவம் போய் வந்ததால் ஏற்பட்ட காலராவுக்கு, இன்ஜக்ஷன் செய்துகொள்வதும், ஆனித்திருமஞ்சன உற்சவம் பார்த்தபோது உண்டான அதிர்ச்சியால் ஏற்பட்ட நோயைப் போக்கிக் கொள்ள ஆபரேஷன் செய்துகொள்வதும், ஆக இருக்கின்றனரே! என்னென்பது இவர்களின் போக்கை! சர். சி. வி. இராமனைப்போன்றவர்கள் அச்சமின்றி, இந்தநிலைமையை எடுத்துக் காட்டி இவர்களின் போக்கைக் கண்டிக்கவேண்டும்-தெளிவு பிறக்கும் நாட்டில். சர். சி. வி. இராமன், தமது விஞ்ஞான அறிவைப் பெறவும், பெற்றதை விளக்கிக் காட்டவும், லண்டன், பாரிஸ், பெர்லின், வியன்னா, ரோம், நியூயார்க், எனும் பல்வேறு இடங்களுக்குச் சென்றிருக்கிறார்—செல்கிறார், அங்கெல்லாம் சென்றும், அறிவு நுணுக்கத்தினாலும், அவர் பெற்றுள்ள ஆராய்ச்சியின் பலனை, நாடு பெற்று முழுப் பயன் அடைய வேண்டுமானால், அவர், அவ்வப்போது ஈரோடுக்கு சென்று வரவேண்டும்-பகுத்தறிவுப் பிரசாரப்பணிபுரிய வேண்டும் என்ற பொருளில் கூறுகிறோம்.


வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்"

விலை: 0—12—0

டிம்மி அளவில் 56-பக்கங்கள் கொண்டது

சி. என். ஏ. எழுதிய

" சிந்தனை விருந்து "

32-பக்கங்கள். விலை: 0—4—0

கிடைக்கும் இடம்:—

பரிமளம் பதிப்பகம்

54. வரகுவாசல் தெரு

காஞ்சிபுரம்.

குறிப்பு:-இரண்டு நூல்களுக்கும் ஒரு ரூபா இரண்டணா முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். விற்பனையாளர்கள் 25% கழிவு நீக்கி முன்பணம் அனுப்பினால் தேவையான புத்தகங்கள் அனுப்பப்படும்.

## பர்னட்ஷா, வேண்டுமாம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

—கதையை மறுத்ததாலே தீர்ந்தது, —என்றுதான் நிலை இருந்தது. கடவுளின் லீலைகள்—அவதாரங்கள்—என்ற பெயருடன், மற்ற நாடுகளிலே இருந்துவந்த—மாளிகைகளிலும் மன்னரின் அரண்மனைகளிலும் இருந்துவந்த — கட்டுக் கதைகளை, மறுத்துப் பேச, மக்களுக்கு இருந்த மனமயக்கத்தைப் போக்க, மதிவாணர்கள், எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், பட்ட கஷ்டங்களையும், நம் நாட்டவர்கள், இன்னும் சரியாக அறியமாட்டார்கள்—தெரிவிக்கப்பட்டதில்லை. சூரியனுக்கு, கரம் ஏழு, கால் எட்டு, என்று நம்பவேண்டாம்—என்றும்—பணத்துக்கு ஒரு பகவான், பலத்துக்கு ஒரு தெய்வம் — பகலுக்கு ஒரு தேவதை, இரவுக்கு மற்றொன்று—உழவுக்கு ஒரு கடவுள், உண்டிக்கு வேறொன்று, என்று இம்முறையில், பல்வேறு கடவுள்களை, வரிசை வரிசையாகக் கொண்டிருந்த, கோயில்கட்டிக் கொண்டாடி இருந்த கடவுள் கூட்டத்தைத் தத்தமது நாட்டு மக்கள் உள்ளங்களிலிருந்து ஓட்ட முயற்சித்து உயிரிழந்த உத்தமர்களை, நாம் இன்னும் நாட்டுக்குக் காட்டவே இல்லை—மக்களுக்கு அந்த மகத்தான வரலாறு, தெரிந்தால் சூது மதியினரும் சுறண்டல் போக்கினரும், சவுண்டி சந்தியாவந்தனங்களும், தூண்டிவிட்டாலும், பகுத்தறிவாளர்மீது பாய, மறுப்பர்! பாரில் பல நாடுகளில், பற்பல பான் — கு தேவதைகள் ஒரு காலத்தில் இருந்தன ஓங்காரச் சொரூபங்களாக—இன்று இல்லை—இடையே, எங்கும் ஓர் அறிவுப் புரட்சி ஏற்பட்டதால் என்பதை, நம் நாட்டுப் பாமரர் அறியார் — அறிவிக்காததால். "புராணத்தையும் தெய்வீகப் புனைந்துரைகளையும் புதிய நோக்குடன் நமது இலக்கிய ஆசிரியர்கள் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். கிருஸ்துவையும் பைபிளையும்நவீன விஞ்ஞானப் பண்புடன் ஆராய்ச்சி செய்து அவற்றில் அழியாத புதுமையைக்காணும் பர்னட்ஷாக்கள் நமக்கு நிறையத் தேவை." என்று—சுயமரியாதை இயக்க ஏடல்ல — சுயமரியாதை இயக்கத்தைச் சூறாவளியாகக் கருதும் தேசிய முகாமினரின் இதழ்களில் ஒன்று—சின்னாட்களுக்கு முன்பு எழுதியிருக்கிறது.

பர்னட்ஷா வேண்டும்! வால்மீகியும் வசிஷ்டரும், கம்பனும் காளிதாசனும், போதவில்லை—கட்டுக் கதைகளை கெட்டுருச் செய்து ஒப்புவிக்கும் கலாரசிகர் போதவில்லை! பர்னட்ஷா தேவைப்படுகிறார்!! ஏன்?

ஒரு விஷயம் சொல்கிறேன் கேளுங்கோ—நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி.......... என்ற பீடிகையுடனேயே, வைதீகர்களே இன்று, பழைய கதைகளைக் கூறவேண்டியிருக்கிறது. காலவேகம் அவ்வளவு வேலைசெய்து வருகிறது.

நமது பெரியவர்கள் சொல்லி விட்டுப்போன, புண்ய கதைகளைச் சொன்னால், இந்தக் காலத்துப் 'பசங்கள்', கேலி பேசறா-நம்பமாட்டேன் என்கிறா—கையாண்டி செய்யறா—அனுமாரின் வாலை நீர் அளந்து பார்த்தீரோ, இந்திரனின் கண்களை எண்ணிப் பார்த்தீரோ, அரம்பை ஆடுவது கண்டீரோ, என்றெல்லாம் கேள்விகளைப் பூட்டிப் பேசறா—நாம், என்ன இருக்கு, செய்ய! ஒவ்வொன்றுக்கும் காரணம் கேட்கிறா, அர்த்தம் கேட்கிறா, ஆதாரத்தைக் காட்டுன்னு மல்லுக்கு நிற்கிறா—" என்றுதான், வைதீகர்கள்-புராணப் பிரியர்கள்—தங்கள் முகாமிலேயே கூட, ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ளும்போது, விசாரப்படுகிறார்கள். பதைக்கிறார்கள் முதலில்—பிறகு திகைக்கிறார்கள்-கடைசியில் அவர்களே சிரிக்கிறார்கள்—ஆமாம் —இந்தப் பயல்கள் சொல்வது போல, புராணக் கதைகள், நம்ப முடியாதவைகளாகத்தான் இருந்து தொலைக்கின்றன-நாம் என்ன செய்வது—என்று சிந்தித்துவிட்டுச் சிரிக்கிறார்கள்.

இந்த நிலையைக் கண்டதாலே தான், சுயமரியாதைக்காரர்மீது சீறிப் பாய்வோருங்கூட, புராணங்களுக்குப் புதிய பொருள் கூறி, திருத்தி எழுதவேண்டும், என்று எண்ணுகிறார்கள். பர்னட்ஷாக்களைத் தேடுகிறார்கள்! இந்த அளவுக்காவது, 'பெரிய மனது' வைக்கிறார்களே, என்பதிலே நமக்குக் கொஞ்சம் சந்தோஷந்தான்! நமது காலத்திலேயே அல்லவா இந்த மாறுதலைப் பார்க்கிறோம். கட்டுக் கதைகளைக் கண்ணை மூடிக்கொண்டு நம்பியாக வேண்டும் — கேள்வி கேட்பவன்—சந்தேகிப்பவன்—கேலி செய்பவன் —கேவலம் நாத்தீகன், ஆகவே அவன் நசுக்கப்பட வேண்டியவன் என்று மிரட்டிய காலம் மங்கி மடிகிறது. புருவத்தை நெரித்தவர்கள் இப்போது புன்சிரிப்புடன் நின்று, புராணத்துக்குப் புதுப் பொருள் தந்து பார்க்கிறார்கள். பர்னட்ஷாக்களை அழைக்கிறார்கள்! — அபயக் குரலொலியில்!!

## காஞ்சிபுரத்தில் பெரியார்

காஞ்சிபுரம் திராவிடர் மறுமலர்ச்சிக் கழக முதலாவதாண்டு விழா 26-11-48-ல் M. V. M. பச்சையப்பனார் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமானமக்கள் விழாவுக்கு வந்திருந்தனர்.

ஊர்வலம் பெரியகாஞ்சிபுரம் தமிழர் உணவு விடுதியிலிருந்து புறப்பட்டது. பெரியார், M. V. M. பச்சையப்பனார், மு. இரத்தினம், N. V. நடராஜன் முதலியவர்களை ஊர்வலமாக அழைத்து வந்தனர். முன்னே ஆறுகுதிரைகளில், ஆறு கருஞ்சட்டை அணிந்திருந்த தொண்டர்கள் அமர்ந்துகொண்டு, கழகக் கொடிகளைக் கரங்களில் ஏந்திக்கொண்டு 'பெரியார் வாழ்க' என்னும் முழக்கம் செய்துகொண்டு, பெருந்திரளான கழகத் தொண்டர்கள் கருப்புடைஅணிந்து, அணிவகுத்து ஊர்வலத்தில் வந்தது குறிப்பிடத் தகுந்ததாகும். முக்கியமான பல தெருக்களின் வழியாகவந்து, விழா நடக்கும் இடத்தைஊர்வலம் மாலை 6-மணிக்கு அடைந்தது.

தோழர் என். வி. நடராஜன் திராவிடர் நிலை குறித்தும், அரசியலார்போக்குப் பற்றியும், பெரியாரின் சிறப்பியல்புகளைப் பற்றியும், விளக்கமாகப் பேசினார். அதன் பின்னர் தலைவர் பெரியார் அவர்கள், 'மறுமலர்ச்சி' என்னும் சொல்லுக்குள்ள பொருளையும், அந்தப்பண்பைத் திராவிடர்கள் எந்த அளவிற்கு மேற்கொண்டுள்ளார்கள் என்பதையும், கட்டாய இந்தி குறித்தும், இந்தி நுழைவால் திராவிடர் நிலை எந்த வகையில் கேடுறும் என்பதை விளக்கியும், மூன்று மணி நேரத்திற்குக் குறையாமல் பேசினார். தலைவர் முடிவுரையுடனும், வந்தனோபசாரத்துடனும் கூட்டம் முடிவுற்றது. பெரியார் அவர்களுக்கும் மற்ற தோழர்களுக்கும் தோழர் மு. இரத்தினம் அவர்கள் இல்லத்தில் இரவு விருந்து நடந்தது. உடல் நலிவோடிருக்கும் தோழர் ஏ.கே. தங்கவேலரைப் பெரியார் கண்டுபேசினார்.

காஞ்சிபுரம் பிரமுகர், தோழர் அ. பாலகிருஷ்ணனார், ரூபாய் 100 பெரியார் அவர்களுக்கு வழங்கினார்.

## நம்பிக்கை இல்லை

4-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மை வலிவை அறிய முடியும்—அலட்சிய சுபாவத்தையும் ஆணவப் போக்கையும், விட்டுத் தீரவேண்டி நேரிடும்.

நாமும், கூட்டம் போட்டுப்பார்த்தோம்—கண்டித்துப் பார்த்தோம்—நம்பிக்கை இல்லை, என்று தீர்மானம் நிறைவேற்றினோம்—என்ன பயன்? சட்டசபைக் கூட்டத்துக்கு ஆசாமி, மாப்பிள்ளை போலப்போய்க்கொண்டுதான் இருக்கிறார், சம்பளம் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார், பதவியைக் காட்டிப் பல சலுகைகளை அடைந்தவண்ணமிருக்கிறார், தம்பி விலாசத்துக்கும், மைத்துனன் பேருக்கும் லைசென்சுகள் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார், நாம் போட்ட கூச்சல் வீணாகத்தானே போயிற்று—என்று சலிப்பு அடையக் கூடாது.

நம்பிக்கை இல்லை—என்ற தீர்மானத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டும்.

சட்டசபைக் கூட்டத்துக்கு அவர் புறப்படும்போது, கவனப்படுத்த வேண்டும், "நீ, எங்கள் உண்மைப் பிரதிநிதி அல்ல—ஏன் சட்டசபை போகிறீர் — என்ன சாதிக்கிறீர் அங்கு போய்?" என்று கேட்க வேண்டும்.

அவர், தமது போக்கையோ முறையையோ மாற்றிக் கொள்ளாமலிருந்தால், "சட்டசபைக் கூட்டத்துக்கு அவர் புறப்படும் போது அவர் வீட்டில் நின்று மறியல் செய்து, அவரைப் போகவிடாமல் செய்யலாம். மறியல், செய்யும் ஊழியரைச் சிறைக்குள் தள்ளிவிட்டுத்தான் சட்டசபை போகமுடியும் என்ற நிலைமையை ஏற்படுத்த முடியும்.

ஏகாதிபத்ய ஏஜண்டுகளை விரட்டச்சிறை சென்ற அதே உள்ள உரத்தை, பொதுமக்களைப் புல்லென்று எண்ணும் இந்த, 'ஏனோதானோக்களை' நீக்கவும் பயன்படுத்தலாம்.

பொதுவாகவே, காங்கிரசின் தயவினால், சட்டசபைக்குள் நுழைந்து கொண்டவர்கள், ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிக்கொண்டவர்கள், மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள்—என்பதை, நண்பர்கள் உணர வேண்டும். எவ்வளவு அதிகமாக ஊழல்நாற்றம்அடித்திருந்தால்,புகார்கள் குவிந்திருந்தால், காங்கிரஸ் M. L. A. க்களும் நிர்வாகிகளும், லைசென்சு பெர்மிட் பெற்று வியாபாரம் செய்யக்கூடாது என்று காங்கிரஸ் கமிட்டியே தீர்மானம் செய்ய வேண்டி நேரிட்டிருக்கும் என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

ஊரிலே, இதே பேச்சாகிவிட்டது கல்கி கூறுவதுபோல, இங்கு லஞ்சம்—அங்கு லஞ்சம்—எங்கும் லஞ்சம், என்ற பேச்சும், இன்ன M. L. A. இந்தக்காரியம் செய்கிறார், கொள்ளை அடிக்கிறார், என்ற புகாரும், கிளப்பினரெங்கும் நாற்றத்தைக் கிளப்பிவிட்டன. அதிகாரிகள் பேசலாயினர், கேலிக்குரலில்.

"சிமிட்டிமூட்டையா வேண்டும்—பத்தா இருபதா? எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். M. L. A. யிடம் ஒருசீட்டு வாங்கிக்கொண்டு வந்துவிடும்" என்று கூறுவது சகஜமான, உத்தியோக முறையாகிவிட்டது. நாடாள வந்தவர்களைப்பற்றி எங்கும் நையாண்டி! இது கேட்டுச் கேட்டுச் சகிக்கமுடியாது போனதால், மிச்சம் மீதி இருக்கும் மதிப்பையாவது காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கலாம் என்பதற்காக, இப்போது ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். மறுதினமே 'பாரததேவி' தீர்மானம் உப்புச் சப்பற்றது—உருவான பலன் தரமுடியாதது—என்று உண்மையை உரைத்துவிட்டது

"மேற்படி தீர்மானங்களினாலும் அவற்றை நிறைவேற்றுவதினாலும் லஞ்ச ஊழல் அடியோடு நிவர்த்தியாகிவிடும் என்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். எப்படிப்பட்ட தீர்மானத்தையும் டிமிக்கிகொடுத்து விட்டு வேறுவழிகளில் தங்கள்காரியத்தைச் சாதித்துக் கொள்ளக் கூடியவர்கள் இருக்கத்தான் இருப்பார்கள்.

* * *

காங்கிரஸ் M. L. A. க்களும், காங்கிரஸ் நிர்வாகிகளும், நேர்முகமாக ஊழல் குற்றத்துக்கு உள்ளாவதைத் தடுத்தால், அதுவே பெரிய முன்னேற்றமாகும்."

* * *

கல்கி, வெளியிட்ட கருத்து இது. மூக்காடிட்டுக்கொண்டாவது மூலைக் கடைக்குப் போய்த் தொலைக்கக்கூடாதா, என்ற பேசுவார்களே, அது போல. ஊழல்ஒழிப்புப்பிரச்னை, இப்போது மிகமிக ஜரூராக பேசப்படுகிறது—அடுத்த தேர்தல்நெருங்க நெருங்க, இந்தக் கண்துடைப்புகள் அதிகப்படும்—எல்லாம் என் அப்பன் ஓட்டரசனுக்கு நடத்தப்படும் பூஜை!

* * *

காங்கிரஸ்காரர்களா! அடடா! வேட்டை ஆடுகிறார்களய்யா, பண வேட்டை! பண மூட்டைகளுக்குப் பக்கமேளம் அடிக்கிறார்கள்—பதவிக் காகச்சண்டை போட்டுக்கொள்கிறார்கள்—என்று நாம் கூறும்போது, கோபம் வருகிறது, காங்கிரசிலுள்ள இளைஞர்களுக்கு, இதோ, பேசுவது, நாமல்ல, காங்கிரசுக்கு வைரியுமல்ல, அரசியல் நிர்ணயசபை அங்கத்தினரும், காங்கிரஸ்காரருமாகிய பிரிஜ்லால்பியானி, பேசுகிறார் — தினசரியில் வெளி வருகிறது—

"அதிகாரத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் போதுப்படையாக சுயலாப வேட்டையில் முனைந்திருக்கிறார்கள். அதிகாரத்திலுள்ளோர் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கோள்வதிலேயே கண்ணுயிருக்கின்றனர். ஏழைகள் நிலைமை அப்படியேதான் இருக்கிறது."

* * *

### குருத்துரோகிக்ள்
### சுயநலமிகள்!
### மதிப்பிழந்தவர்கள்!
### பதவிப்பிரியர்கள்!

பிரிஜ்லாலின், பேச்சைச் சுருக்கினால் கிடைக்கும் பதங்களல்லவா இவை! எப்படிப்பட்ட குற்றச்சாட்டு! யார் கூறுவது! நாட்டுப்பற்றுக்காரணமாக ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சி காரணமாகக் காங்கிரசில் ஈடுபட்டு, உழைத்து, உருக்குலைந்துபோயுள்ள உண்மைஊழியர்கள், இப்படிப்பட்ட சொற்கள் செவியில் விழும் என்று எதிர்பார்த்தனர். ஒரு புது ராஜ்யத்தை, புனித ராஜ்யத்தை, பொற்காலத்தை எதிர் பார்த்தனர்! தொண்டுசெய்யும் தூயவர்களை விரும்பினர். பதவிமோகமும் சுயநலவெறியும் துளியுமில்லாதவர்களின் தலைத்தனம் அமையும் என்று நம்பினர். மற்றக் கட்சியினர் ஆண்டபோது இலஞ்ச இலாவணம் தலைவிரித்தா

டிற்று, காங்கிரசார் ஆட்சி அமைத்தால், மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்ட குணாளரின் ஆட்சியாக இருக்கும் என்று நம்பினர்—நம்பிக்கை நசித்துவிட்டது—நொறுங்கிவிட்டது—குணாளர் அல்ல, குடிலர்கள் இவர்கள், என்று கண்டு மனம் குமுறுகின்றனர். தொகுதியை மறந்தவர்கள்—சொன்ன சொல்லை மறந்தவர்கள்—எளிமையைமறந்தவர்கள், ஏழையை மறந்தவர்கள், இவ்வண்ணம் காட்சியளிக்கின்றனர், ஆளும் வாய்ப்புப் பெற்றதும். மனவேதனையின் தன்மையையும் அளவையும், எப்படிக் கூறுவது! மலைமீது ஏறி மிகக் கஷ்டப்பட்டுப் பறித்து வந்த மூலிகை, கடைசியில் கூர்ந்து பார்க்கும்போது, விஷப்பூண்டு என்று தெரிந்தால், கடலில் விழுந்த கன்னியைக் கண்டுபிடிக்கக் கடலில் மூழ்கி மூச்சடக்கி உள்ளே தேடி, கைக்குத் தட்டுப்பட்ட உருவத்தைக் கன்னி என்று எண்ணி வெளியே கொண்டு வந்து பார்க்க, கன்னியல்ல கள்ளனின் பிரேதம் என்பதறிந்தால், எவ்வளவு வேதனை உண்டாகும்! அது போலன்றோ முடிந்தது, நாட்டுப்பற்றுக்காரணமாக, நானாவிதமான கஷ்டங்களை அனுபவித்த நண்பர்கள், இன்று காணும் ஆட்சியின் மாண்பு. நம்பிக்கை நொறுங்குகிறது.

அமைச்சர் முன்னிலையில், காந்தீயக் கவி அரங்கம் ஒன்று, சென்னை வானொலி நிலையத்தில் நடைபெற்றது 2-10-48ல். அதிலே, நம்பிக்கை எனும் தலைப்பில் பாடிய, குயிலன் எனும் கவிஞர், நம்பிக்கைநொறுங்கியிருப்பதை உள்ளம் உருகப் பாடினார். கேட்பவர், மனம்கரையும் விதமாக மட்டுமல்ல, ஆளவந்தார்கள், ரோஷ உணர்ச்சியுள்ளவர்கள்தானா என்று பரீட்சிக்கும் முறையிலேயும் பாடினார். அமைச்சர் பக்தவத்சலனார் செவிடரல்ல—அருகில் வீற்றிருந்தார்—தலைமை தாங்கினார். அவர் எதிரில்தான், நாட்டு மக்கள் சார்பில் நற்பண்பின் சார்பில், ஒரு கவிக்கு உள்ள உரிமையையும் இழக்காமல், கடமையையும் மறவாமல், குயிலன் கேட்டார்,

"நாடு சுதந்திரம் பெற்றுவிட்டால் பின்னர்
நல்ல தொழில் வளரும்
வாடிடும் வேலையில்லாத் தொழிலாளர் நல்
வாழ்வினைப் பெற்றிடுவார்
அத்தனை ஆலையும் மக்கள் சொத்தாகி விடும்
யாவினும் திட்டமுடன்
மெத்தப் பொருள்கள் பெருக்கிக் குவித்து நாம்
மேன்மைகள் பெற்றிடலாம்.
காணி நிலம்கூட இல்லாமல் கூலிக்குக்
காலம் கடத்துகிறோம்.
வீணில் உழைத்துழைத் தேதும் பயனின்றி
வெயிலில் மாளுகிறோம்.
காந்தி சொல்லும் சுயராஜ்யம் வந்திடில்
கையில் கலப்பையினை
ஏந்தி உழுபவர்க்கே நிலம் சொந்தம்
எனும் முறை வந்துவிடும்
விட்டு விடுதலையாகி இங்கு
மேவிடும் நன்மைகள் யாவையும் பெற்று
கட்டுகள் யாவும் தகர்ந்து மக்கள்
கண்ணியமாகவே வாழ்ந்திடுவார்கள்
ஒட்டும் வயிறினி இல்லை நாடும்
உண்மைச் சுதந்திரம் பெற்றுவிட்டோ மேல்
தட்டி நிமிர்த்திடு மார்பை என்று
தன்னிகரற்றிடு நம்பிக்கை தந்தார்
நாட்டில் விடுதலை பெற்றோம் காந்தி
நம்பிக்கை யாவும் உருப் பெற்றதோ தான்"

என்று கேட்டார் அந்த இளைஞர்.

* * *

உருப்பெற்றதோ! நம்பிக்கை உருவாயிற்றோ!! ஏதேதோ எண்ணினோமே, இன்பக்கனவு கண்டோமே, ஏழையின் கண்ணீர் துடைக்கப்படும், ஏமாளியின் இரத்தத்தை எத்தர்கள் குடிக்கும் முறை ஒழியும் என்று நம்பினோமே, அந்த நம்பிக்கைகள், உருப்பெற்றதோ, என்று கேட்டார், அமைச்சர், எதிரில் தான் இருந்தார் — பேச்சற்று— வகையற்று! நாட்டு மக்கள் செவியிலே கேட்கிறது அந்தக்கவிஞனின் குரல்! அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது அமைச்சர் அரங்கத்துக்குத் தலைவர் என்றும் — அமைச்சர் என்ன செய்தார்! குயிலன் மக்களின் குமுறலை வெளிப்படுத்தினார்- அமைச்சர், கேட்டுக்கொண்டிருந்தார்—சிந்தித்தாரோ இல்லையோ, நாமறியோம்.

இந்தக் கேள்வியைக் கேட்குமுன்னம், கேட்பதற்கு உரிமை மக்களுக்கு, அதிலும் குறிப்பாக இளைஞருக்கு உண்டு என்பதைக் குயிலன்,

"நம்பிக்கை கொண்டனர் தேசியப் போரிலே
நாட்டமுடன் குதித்தார்.
தம்முடை இல்லம் துறந்து சிறைதனில்
தங்கித் தவமிருந்தார்."

என்று கூறினார். அதுமட்டுமா!

"என்னரும் நாட்டைச் சுரண்ட இனி
எப்படியும் விடப்போவதே இல்லை
இன்னுயிர் தந்து தடுப்போம் என
எத்தனை தொண்டர்கள் உயிர் துறந்தார்கள்"

என்று கேட்கிறார் — மனிதாபிமான உணர்ச்சிக்கும் மந்திரிப் பதவிக்கும் விரோதமில்லாதிருந்தால், மந்திரி அழுதிருக்கவேண்டும், எத்தனை தொண்டர்கள் உயிர் துறந்தார்கள்? என்ற அந்தச் சொல்கேட்டு. அமைச்சர் என்ன நிலையில் இருந்தாரோ அறியோம்.

குயிலன், மக்களின் நம்பிக்கை, ஏன் முறிந்தது—அவர்களின் மனம் உடையும்படி ஆளவந்தார்கள், என்னென்ன செய்தனர், என்பதை, நக்கீரர் முறையிலே, கூறினார்.

"வெள்ளையராட்சியில் அன்று மக்கள்
வேட்டை நடத்திடப் பற்பல சட்டம்
கொள்ளையர் வைத்திருந்தார்கள் அவர்
கொட்டமடக்கிடச் சட்டத்தை மீறி
உள்ளக் கொதிப்பினைக் காட்ட அன்று
ஒற்றுமையாகத் திரண்டெழச் செய்தார்
வெள்ளையர் போயினர் ஆனால் அந்த

வீணர் தம் சட்டங்கள் போவ
தும் என்றோ"

குயிலன், காங்கிரசாட்சியிலேயும் காணுகிறார், வெள்ளையராட்சியின் போது இருந்துவந்த, நசுக்கிவந்த அடக்குமுறைச் சட்டங்கள் அவ்வளவையும். இவைகள் ஒழியும் என்ற நம்பிக்கையினாலேதான், சீறிப் போரிட்டனர், நாட்டு விடுதலைக்கு! குருதி கொட்டினர், நாட்டைமீட்க. நாடு விடுவிக்கப்பட்டது; ஆனால், மக்களை நசுக்கும் சட்டங்களின் இடிமுழக்கம் ஒழியவில்லை—எனவே கேட்கிறார், அந்த "சட்டங்கள் போவதும் என்றோ!" என்று.

அமைச்சரின் முகத்திலே, என்ன கண்டாரோ குயிலன், நமக்குத் தெரியவில்லை, ஆனால், அமைச்சர், "என்னய்யா இது, கொடிய சட்டங்கள் உள்ளன என்று குறை கூறுகிறாயே, என்ன செய்து விட்டோம் கேடு நாங்கள்" என்று கேட்டாரோ என்னவோ, விழியால், கவிஞர், பளீர் என்று சொல்லால் அறைகிறார்.

"கூலி உயர்த்திடுவீரே பிள்ளை
குட்டிகள் வாழ்ந்திட வேண்டு
மென்றேதான்
வேலை செய்யும் தொழிலாளி
பயிர்
மேன்மையுடன் வளர் நல்
விவசாயி
காலைப்பிடித்தின்று கேட்டால்
நெஞ்சில்
கத்தியும் குண்டுமோ பாய்ச்
சிட வேண்டும்?"

* * *

காலைப்பிடித்துக் கொண்டு உதவி கேட்கும் உழவன்! அவன் மார்பில் கத்தியும் குண்டும் பாய்ச்சும் ஆட்சி முறை!! மனக்கண்ணால் பாருங்கள், அந்த வேதனை நிரம்பிய காட்சியை. கண்ணைத்துடைத்துக்கொள்ளுங்கள் கசையடி தரும் கவி(—சொல்லால்—உண்மையால் —) அதுபெற்றுவாய் திறவாதிருக்கும் அமைச்சர்—இந்தக் காட்சியையும் மனக்கண்ணால் காணுங்கள். போதாதா! நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றும் காங்கிரஸ்காரர்—அந்தச் சேதி கேட்டு, சீற்றமும், சோகமும்கொள்ளும் M. L. A!— இந்தக் காட்சியையும் காணுங்கள் மனக்கண்ணால்! எப்படி இருக்கிறது!!

கல்கியிலே மற்றுமோர் காட்சி, கதைவடிவில் — வெளிவந்தது! ஏழைக்கு உதவி செய்வதாகக்கூறி, ஓட்டுபெற்று M. L. A. ஆகிறார், ஒரு அன்பர்-பெயர், அன்ன விசாரம்! —பிறகு ஓட்டளித்த ஏழையைக் கைவிட்டுவிடுகிறார்; மந்திரி ஆசைக் கனவிலே மனம்செல்கிறது-ஏழைகள் அவரிடம் வந்து அழுகிறார்கள் — அன்ன விசாரம், அவர்களை ஏசுகிறார் வேறு வேலை இல்லையா, போங்கள்—என்று. அவர்கள், "ஐயா! நீர், எங்கள் பிரதிநிதியல்லவா!" என்றுகேட்கிறார்கள்-கெஞ்சுகிறார்கள். அன்பர் அன்னவிசாரம்.

"அடேய்! அதிகப்பிரசங்கி! நான் யாருக்குப் பிரதிநிதி என்று கேட்கிறாய்? சொல்கிறேன் கேள்; நான் எனக்குப் பிரதிநிதி - என் மனைவிக்குப் பிரதிநிதி—என் மக்களுக்குப்பிரதிநிதி — என் வீட்டுக்குப் பிரதிநிதி-! உனக்கும் பிரதிநிதி இல்லை-உன்னைச்சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதி இல்லை, போ,-என்று கத்திவிட்டுக் குளிக்கும் அறையை நோக்கி மந்திரி நடை நடந்துசென்றார்."

நம்பிக்கை இல்லை, என்று காங்கிரசைச்சார்ந்தவர்களே தீர்மானம் நிறைவேற்றிய சேதி கேட்டதும் கதையில் குறிப்பிடப்படும் அன்ன விசாரத்தைப் போலவே, அந்த M L A க்களும், ஆத்திரமடையத்தான் செய்வார்கள்.

"அப்படிப் போடுங்கள் ஒரு போடு! அடுத்த எலெக்ஷன்வரும் வரைதான் நமக்குக் கவலையில்லையே" என்று தன்பதி சொன்னதை, அப்படியே ஆமோதித்தாள் அவருடைய சதி" என்று எழுதி, அந்தக் காட்சியைக் காணவைக்கிறது கல்கி.

"ஓஹோ! நீங்களா? வாங்கய்யா, வாங்க! அண்டப்புளுகரே! அகப்பட்டதைச் சுருட்டும் அசகாய சூரரே! பெட்டிக்குள் பதுங்கியிருந்த பாம்பே! வெட்கம், மானம், ரோஷமில்லாமல், நீ, எலக்ஷனுக்கும் நிற்கிறாய? ஓட்டுப் போடவேண்டுமா ஓட்டு, உனக்கு" — என்று கோபமாகப்பேசும் பொது மக்களும் அசடுதட்டும் முகத்துடன் நிற்கும், பல அன்னவிசாரங்களும், நமது மனக்கண்முன் நிற்கிறார்கள். அந்தக் காட்சி சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் தெரியும்—ஆனால் நாம் குறிப்பிட்டது போல, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர, சத்யாக்கிரக முறையைக் கையாண்டால், மிகமிக சுவை தரும் காட்சியைக் காணமுடியும்.

M. L. A. யின் வீட்டு வாயற்படியில் தொண்டர்கள்.

பதவியை விட்டேவிடு
பதவியை விட்டேவிடு

என்று முழக்கமிட்டபடி நிற்கின்றனர்—கதர்உடை, சக்கரக்கொடி சகிதம்.

உள்ளே கவலையுடன் உலவுவதும் ஜன்னல் வழியாக மெள்ள வெளியே பார்ப்பதுமாக, அன்னவிசாரம் இருக்கிறார்.

அகிலாண்டம்:—பைத்யமா உங்களுக்கு! ஏதுவோ பசங்க கூவினா, பயந்துகிட்டு, வீட்டுக்குள்ளே பதுங்கிக்கொள்றீங்களே. புறப்படுங்க ரயிலுக்கு நேரமாகுது.

அன்னவிசாரம்:-இருடி, நீ வேறே உசிரை வாங்காதே. வெளியே தலை காட்டினா, அந்தப்பசங்க, சும்மாவா இருப்பாங்க..................

அகி:—சும்மா இல்லாமே, உன்னை தூக்கியா விழுங்கிடுவாங்க..........

அன்:—உனக்கென்னடி தெரியும் —சத்யாக்கிரகம் செய்வது என்றால் —காலைப் பிடித்துக் கொள்வான் ஒருதொண்டன்—வழியில் படுத்துக் கொண்டு, என்மீது ஏறிடந்துதான் போகவேண்டும், என்பான். தெருவிலே, கூட்டம் கூடிவிடும். பாவி, பாதகா, என்று ஜனங்கள் தூற்றும்.

அகி:—ஊரிலே, போலீசே இல்லையாதா!

அன்:—இருந்துபோலீசை விட்டு மிரட்டினால், என மானமும் போய் விடுமே.

என்று அன்னவிசாரம் அழுகுரலுடன் கூறுகிறார்.

ரயில் கூவுகிறது—அவர் பதைக்கிறார்—தொண்டர்கள் களிக்கிறார்கள்.

ரயில் புறப்பட்டுப் போய்விட்டது —அன்னவிசாரம், சட்டசபை போக முடியவில்லை—நம்பிக்கையில்லாத் தீர்மானம் அமுலுக்கு வருகிறது.

இந்தக் காட்சியையும் காணமுடியும், இலட்சிய நோக்கமும் உள்ள உரமும் கொண்ட காங்கிரஸ் இளைஞர்கள், முனைந்து, பணியாற்றினால்!

*

# பொன் விலங்கு

விலங்கு தயாரிக்கப்படுகிறது டில்லியில். இரும்பினால் அல்ல; பத்தரை மாற்றுப் பசும்பொன்னால். வெள்ளையர்கள் அல்ல இதனைத் தயாரிப்பவர்கள்; பாரதப்புதல்வர்கள்.

அன்றொரு நாள், இன்றும் அமுலில் உள்ள 'மாகாண சுயாட்சி' திட்டத்தை, அடிமை சாசனம், (Charter of Slavery) அதனைத் தொடவும் மாட்டோம், அதில் மாகாண கவர்னர் சர்வாதிகாரியாக்கப்பட்டிருக்கிறார், இந்நிலையில் மக்கள் பிரதிநிதிகளுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது என்று பசப்புவது வெறும் பித்தலாட்டம், இதற்கு 'சுயாட்சி' என்னும் பெயர் பொருந்தாது, இதனை உடைத்தெறிவதே நாட்டுப் பற்றுடையோரின் கடமை என்றும், அதற்காகவே தாங்கள் சட்டசபை செல்வதாகவும், அதிகாரத்தை அமுல் நடத்துவதாகவும் கூறி, இந்த அருந்தவப் புதல்வர்கள் அதிகாரத்தை ஏற்றனர். பதவி பெற்ற பின்னர், முன்னாள் பேசிய பேச்சுகளை எல்லாம் மறந்து நடந்து கொண்டனர். 'சுயாட்சி' திட்டத்தை செயலாற்றுவதின் மூலம் (Wrecking by working) உடைத்தெறிவோம் என்று எழுத்தாலும் பேச்சாலும் ஏமாந்தவர்களுக்கு எடுத்துக் கூறினர்.

படித்தவர்களுக்கும் பணம்படைத்தவர்களுக்குமே, அந்த அடிமைச் சாசனத்தில் வாக்களிக்கும் உரிமை இருந்தது. இவர்கள் சிறு தொகையினர். மற்ற மக்கள் நாட்டாட்சியில் எந்தவிதப் பங்கும் கொள்வதற்கு வாய்ப்பில்லாமல் செய்யப்பட்டுவிட்டது. சிறு பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளையும், அதட்டிக் கேட்பதற்கு கவர்னருக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, 'மாகாண சுயாட்சி' என்று அதற்குப் பெயர் கொடுத்திருந்த போதிலும், அது ஒரு அடிமைச்சாசனம் என்று ஆர்ப்பரித்தனர்!

ஆனால், இன்று நாம் காண்பதென்ன? டில்லியில் தயாரிக்கப்படும் எதிர்கால அரசியல் அமைப்பின் விதிவிலக்குகள் என்ன? கவர்னரின் அதிகார எல்லை எது? மாகாண சட்டசபைக்குள்ள அதிகாரங்கள் எவை எவை? மத்திய சர்க்காருக்கு உள்ள அதிகாரங்கள் எவை? மத்திய சர்க்காரின் தலைவருக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் இடம் எது? இவ்வளவையும், நுணுகி ஆராய்ந்து பார்க்கின்றபொழுது, வெள்ளையர் வகுத்த 'மாகாண சுயாட்சி' திட்டத்திலும், இது மிகவும் பிற்போக்கானதாக இருப்பதைக் காணலாம். வெள்ளையர்கள் சிலருக்கே வாக்குரிமை அளித்தனர். ஆனால் மாகாண அதிகார வரம்புக்குள், மாகாண எல்லைக்குட்பட்ட பல விஷயங்களைச் சேர்த்திருந்தனர். இன்று சிலருக்கு வாக்குரிமை என்பது மாற்றப்பட்டு, வயது வந்த அனைவருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாகாண அதிகாரத்தைப் பொறுத்த பலவிஷயங்களை மத்திய சர்க்கார் பறித்துக்கொண்டிருக்கிறது.

அதிகாரமில்லாத சபை! ஆனால் அனைவராலும் தேர்ந்தெடுத்தபிரதிநிதிகள் நிறைந்துள்ள பேச்சு மேடை!

1946 டிசம்பர் 9-ல், டில்லியில் நடந்துவரும் அரசியல் அமைப்பு மன்றம் துவக்கப்பட்டது. பிரிட்டிஷ் மந்திரிகளின் ஆணைப்படி அமைக்கப்பட்டதாகும் இது. முழு அதிகாரம் அதற்கில்லை. சிற்சில நிபந்தனைகளின் மீதுதான், அது எதிர்கால அரசியலை அமைக்கக் கடமைப்பட்டிருந்தது.

இந்தச் சபையின் பிரதிநிதிகள், மக்கள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அன்று. சிறுபான்மைவாக்காளர்களாலும், நேரடியாக இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களில்லை. ஒவ்வொரு மாகாண சட்டசபை அங்கத்தினர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனவே காங்கிரஸ் கட்சியினரே அதிகப்படியாக, இந்தச் சபையில் இடம் பெற முடிந்தது.

முஸ்லிம்லீக் அங்கத்தினர்கள் இதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். இதன் பலனாக, இந்தத்துணைக்கண்டத்தின் நிலையை மாற்றி அமைக்க பிரிட்டிஷார் முனைந்தனர். முழு அதிகாரத்தையும் ஒப்படைத்துவிட்டு வெள்ளையர் வெளியேறிவிடுவதெனத் தீர்மானித்து விட்டனர். 1947-ஜூலையில் இந்தியசுதந்திரச்சட்டம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது. நாடு, பிரிக்கப்பட்டது. இரு பகுதிகளுக்கும் தனித்தனி இரு அரசியல் ஆக்கமன்றம் ஏற்படுத்தப்பட்டது. தங்களுக்கு விருப்பமான அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளலாமென உரிமை வழங்கப்பட்டது. இருந்தாலும், இச்சபையின் அமைப்பு முறையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அதாவது, வயதுவந்தோர்களுக்கெல்லாம் வாக்குரிமை வழங்கி, அவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுத்தவர்களைக் கொண்டுதான், எதிர்கால அரசியல் அமைக்கப்படவேண்டுமெனும், ஜனநாயகக் கோட்பாடு மேற்கொள்ளப் படவில்லை. மக்களுக்காக அமைக்கப் போகும் அரசியல் முறையில், மக்களின் கருத்து பிரதிபலிப்பதற்கு இடமில்லாமல் போய் விட்டது. இருந்தாலும், இது மக்களாட்சி முறைதான்!

1947, ஆகஸ்டு 29-ல், புதிய அரசியல் அமைப்பை உருவாக்க, டாக்டர் அம்பேத்கார் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அமெரிக்க ஐக்கியநாடுகள், கனடா, ஆஸ்ட்ரேலியா, ஐயர்லாந்து, முதலிய நாடுகளின் அரசியல் அமைப்பின் சிற்சில பகுதிகளை வெட்டியெடுத்து, அவ்வாறு வெட்டிஎடுத்த பகுதிகளை எல்லாம் ஒன்றாக ஒட்டி, புதிய அரசியல் அமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனபோதிலும், எந்த 'மாகாண சுயாட்சி' திட்டத்தைக் கையினாலும் தொடுவது துரோகம் என்று கூறப்பட்டதோ அதே சுயாட்சி திட்டத்தின் மாற்றுப் பதிப்பாகவே, புதிய திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

18-பிரிவுகள், 315-ஷரத்துகள், 8-அட்டவணைகள் நிரம்பியதாகப் புதிய அமைப்பு இருக்கிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.